
# பல்லவி

இசை, நடன, காலாண்டிதழ்





கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

சித்திரை 1988

*With best wishes from*

**NEW ANANTHAS**

**167, Stanley Road,**

**JAFFNA.**

# PALLAVI

A music and dance quarterly

**APRIL 1988**

# பல்லவி

இசை - நடனக் காலாண்டிதழ்

சித்திரை , 1988



நிர்வாக ஆசிரியர்:

W. S. செந்தில்நாதன்

B.A., Dip. in Ed. , F.R.A.S.

வழக்கறிஞர்

*

இணை ஆசிரியர்கள்:

S. N. நடராஜ ஐயர்

Dip. in Music,

இளைப்பாறிய இசை ஆசிரியர்

*

S. கணபதிப்பிள்ளை

சங்கீத பூஷணம்

கல்வி அதிகாரி, இசை

*

A. K. கருணாகரன்

சங்கீத வித்வான்

விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவு

*

P. முத்துக்குமாரசாமிசர்மா

சங்கீத பூஷணம்,

இளைப்பாறிய இசை ஆசிரியர்

சென்னை



நிர்வாக அலுவலகம்:

167, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23558

தனிப்பிரதி ரூபா 10/-

வருடசந்தா ரூபா 50/-


## அநுபல்லவி


1. ஒரு பயனுள்ள கருத்தரங்கு
2. ஜி. என்.பி. : ஒரு புதியபாணி
3. தியாகராஜ கிருதி விளக்கம்
4. ந. சண்முகரத்தினம்
5. கலைப்புதிர்
6. வெளி நாடுகளில் நம் கலைஞர்கள்: பூஷணி கல்யாணராமன்
7. ராகலக்ஷணம் — சங்கராபரணம்
8. டாக்டர் எஸ். இராமநாதன்
9. ஈமனி சங்கரசாஸ்திரி
10. சீர்காழி எஸ். கோவிந்தராஜன்
11. விமர்சனம்
12. செய்திகள்


## சரணம்

குறிப்பு :

இம்மலர் சென்ற வருடம் ஐப்பசி மாதம் வெளிவருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு முக்கால்வாசிக்கு மேல் அச்சாகியிருந்தது. திடீரென நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக வெளியிட முடியவில்லை. பிந்திய செய்திகளுடன் இப்போது வெளியாகிறது.

# ஒரு பயனுள்ள கருத்தரங்கு

வடஇலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்படும் 5ம், 6ம் தரப்பரீட்சார்த்திகளுக்கென இம் மாதம் 1ம், 2ம், 3ம் திகதிகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஒரு கருத்தரங்கு நடாத்தப்பட்டது. பிரதமகல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பின்வருவோர் பல்வேறு விஷயங்கள் பற்றி ஆய்வுரைகள் வழங்கினர்: கலாநிதி சபா. ஜெயராசா, பிரம்மஸ்ரீ எஸ். என். நடராஜன், திரு. வ. ஆறுமுகம் திரு. சு. கணபதிப்பிள்ளை, திருமதி லீலாம்பிகை செல்வராஜா, கலாநிதி சி. மௌனகுரு, திரு ப. சந்திரசேகரம், திரு. கு. சோமசுந்தரம், பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் திரு. பொன். தெய்வேந்திரன், திரு. இ. சிவானந்தன், கலாநிதி நா. சுப்பிரமணியம் திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன், திரு. எல். திலகநாயகம் போல், திரு. ம. சண்முகலிங்கம், திருமதி. த. சிதம்பரநாதன், திரு. ந. வி. மு. நவரத்தினம்.

மாலை வேளைகளில் ராகம்பாடுதல், பல்லவி பாடுதல், வாத்தியங்கள் சுருதி சேர்த்தல், இசைநடனம் கற்பித்தல் முதலியன செயன் முறைவிளக்கங்களுடன் நடாத்தப்பட்டன. இவற்றில் திரு. ஏ. கே. கருணாகரன் திரு. எஸ். பாலசிங்கம், திரு. எல். திலகநாயகம் போல், திரு. சு. கணபதிப்பிள்ளை, செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம், திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி செல்வி நந்தினி சோமசுந்தரம், திரு. எம். சிதம்பரநாதன், திரு. எஸ். மகேந்திரன், செல்வி நளாயினி இராசதுரை, திருமதி டி. குமாரசுந்தரம் ஆகியோர் பங்குபற்றி நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தனர்.

தினமும் காலை 8 மணிமுதல் இரவு 7 மணிவரை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 6ம் தரப்பரீட்சார்த்திகளுக்கு வதிவிட வசதி செய்து கொடுக்கப்பட்டு பங்குபற்றிய எல்லோருக்கும் நேரத்துக்கு நேரம் உணவு, தேநீர் வழங்கப்பட்டன. கருத்தரங்கு மிகவும் வெற்றிகரமாக முடிந்ததற்கு இசைக் கல்வி அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளையின் அயரா முயற்சியே காரணமாகும்.

நமது நிருபர்

## மதிப்பீடு:

இக்கருத்தரங்கிற் பங்கு பற்றிய 103 தேர்வுநாடிகளின் தொகுத்த மதிப்பீடு ஒன்று இறுதியில் மேற்கொள்ளப்பட்டது. இது போன்ற எதிர்காலக் கருத்தரங்குகளிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென தேர்வு நாடிகள் விதந்துரைத்துள்ள விஷயங்கள்:-

1. 22 சுருதிகள் பற்றிய விளக்கம்
2. 108 கரணங்கள்
3. நவரசங்களும் அவற்றிற்கான ராகங்களும் நிறங்களும்
4. நடன நாடகங்கள்

கருத்தரங்கிலே கலந்து கொண்ட தேர்வு நாடிகள் நல்லபல ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். அவற்றுள் முதன்மையான சில வருமாறு:

1. நாட்களைக் கூட்ட வேண்டும். அல்லது 2 அல்லது 3 முறை ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. இசையரங்குகளுடன் கூட தாளவாத்தியக்கச்சேரி, நடன நிகழ்ச்சி, நாடகம் என்பனவும் இடம் பெற வேண்டும். வில்லிசை கதாப்பிரசங்கம் ஆகியனவும் சேர்க்கப்பட வேண்டும்.

3. உரைகளை அரை மணித்தியாலங்களுக்குச் சுருக்கி அடுத்துவரும் அரைமணித்தியாலங்களையும் கலந்துரையாடவும் அறிக்கைதயாரிக்கவும் பயன்படுத்த வழிசெய்ய வேண்டும்.

4. பங்குபற்றுநரைத் தத்தம்துறைசார்ந்த குழுக்களாக்கி, செயலமர்வு, மேடைகச்சேரி, நிகழ்ச்சிகள், மாதிரிப்பாடம் நடாத்தல்என்பவற்றில் ஈடுபடவாய்ப்பு அளிக்க வேண்டும்.

5. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வன்னி, கிழக்குப் பிரதேசங்களிலும் இத்தகைய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யவேண்டும்.

**தொகுப்பு:** 103 தேர்வு நாடிகளையும் மதிப்பீட்டாளர்களாக்கி அதன் பேறுகத்திரட்டி எடுத்த மேற்படி சாராம்சக்கருத்து எமது கலைகளை நன்நெறிப்படுத்தத் தலைசிறந்த வழிகாட்டியாக அமைகிறது. இத்துறை சார்ந்த சிந்தனையாளரும் சாதனையாளரும் இவற்றையிட்டுத் தீவிர சிரத்தை கொள்வார்களாக.

இ. சிவானந்தன்



# ஜி. என். பி.

## ஒரு புதிய பாணி

தென்னிந்தியாவிலே பல நூற்றண்டுகளாக நுண்கலைகளிற் தலைசிறந்து விளங்கியது சோழவள நாட்டின் தலைநகராகிய தஞ்சாவூர். தஞ்சைப் பெரிய கோயிலென்னும் பிருஹதீஸ்வர ஆலயத்தின் அமைப்பும் அங்கே காணப்படும் சிற்பவடிவங்களின் திறனும் இதற்கொரு சான்றாகும். இதே போலவே இசை நடனம் நாடகம் முதலிய ஏனைய துறைகளிலும் தஞ்சை முன்னணியிலே நின்றது. சங்கீத மும்மூர்த்திகளும் தஞ்சாவூர் ஜில்லாவையே சேர்ந்தவர்கள். சோழமன்னர்களும் வள்ளல்களும் போட்டிபோட்டுக் கொண்டு நுண்கலைகளைப் பரப்புவதில் ஈடுபட்டனர்.

தஞ்சாவூர் ஜில்லாவிலே மாயவரத்திலிருந்து (தற்போது மயிலாடுதுறை) 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது கூடலூர் என்றொரு கிராமம். ஜி என் பியின் முன்னோர்கள் இக்கிராமத்திலேயே வாழ்ந்து வந்தனர். தந்தையார் ஜி. வி. நாரயணஸ்வாமிஐயரும் தாயார் விசாலம்மாவும் சங்கீதம் கற்றவர்கள், நன்றாகப்பாடுபவர்கள், நல்ல சாரீரம் படைத்தவர்கள். தந்தையார் சென்னையில் திருவல்லிக்கேணியிலுள்ள இந்து உயர்தரப் பள்ளியில் ஆசிரியராகவும் பின்னர் தலைமையாசிரியராகவும் கடமையாற்றினர். மேலும் பார்த்தசாரதி ஸ்வாமி சபாவின் செயலாளராகப் பல ஆண்டுகள் இருந்த இவர் சங்கீத வித்துவான்களின் நட்பையும் பெருமதிப்பையும் பெற்றிருந்தார். இவர்களின் முதலாவது பிள்ளையே பாலசுப்பிரமணியம். 1910 ம் ஆண்டு ஆனி மாதம் 6ம் திகதி பிறந்தார். இவரை மணி என்று செல்லமாக அழைப்பார்கள். சிறுவயதிலிருந்தே மணி சங்கீதச் சூழலிலேயே வளர்ந்து வந்தார். கோனேரிராஜபுரம் வைத்திய நாதஐயர், பல்லடம் சஞ்சீவராவ், திருச்சி கோவிந்தசாமிப்பிள்ளை, பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலிய சிறந்த வித்வான் களெல்லாம் இவர் வீட்டுக்கு அடிக்கடி வருவதுண்டு. அயல் வீட்டில் வசித்து வந்த பிரபலவயலின் வித்வான் கரூர் சின்னஸ்வாமி ஐயரின் இசையைத் தினமும் கேட்டுக்கிரகித்துக் கொண்டார். இளம் வயதிலேயே இவருடைய பாட்டுத் திறமையைப்பார்த்துத் தந்தையார் மிகவும் மகிழ்ச்சியடைந்து தாமே மணிக்கு இசைக் கல்வியைப்புகட்டி வந்தார். பின்னர் கரூர் சின்னஸ்வாமி ஐயரின் மாணவர்களில் ஒருவரும் மணியின் வீட்டிலேயே குடியிருந்து வந்தவருமான மதுரை சுப்பிரமணிய ஐயரிடம் இசைபயின்றார். மணி சிறுவயதிலே ஆறரைக்கட்டை சுருதியில் மிகவும் துரிதமாகப் பாடுவார். ஒருநாள் அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் இவர் வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது மணியின் தந்தையார் வேகத்தைக் குறைத்து ஆறுதலாகப் பாடு என்று மணியை எச்சரித்தார். உடனே ஐயங்கார் "அவனுடைய நடையையும் பாணியையும் குழப்பவேண்டாம். இளம் வயதிலே எல்லோரும் மிகவும் துரிதமாகத்தான் பாடுவார்கள். காலப்போக்கில் அது சரியாகிவிடும். பையனுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது" என்று கூறி ஆசிர்வதித்தார். மணியின் மானஸிக குருவான ஐயங்காரிடமிருந்து வேண்டிய உதவிகளையும் உற்சாகத்தையும் பெற்றது மணியின் அதிர்ஷ்டமாகும்.


இதற்கிடையில் மணி தனது கல்வியிலும் முன்னேறிக் கொண்டே சென்றார். தனது பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிற் சேர்ந்து ஆங்கில இலக்கியத்தில் பி. ஏ. (ஆனர்ஸ்)

பட்டம் பெற்றார். மணிசட்டம் படித்து ஒரு வக்கீலாக வரவேண்டுமென்று தந்தை விரும்பினார். ஆனால் மணியோ சங்கீதம் கற்க வேண்டுமென்று ஒரே பிடியாய் நின்றதைக் கண்ட நண்பர்களும் வித்வான்களும் மணிக்கு இசையுலகில் நல்ல எதிர்காலமிருப்பதை உணர்ந்து அவன் இசையையே படிக்கட்டுமெனக் கூறினர். தந்தையார் கலக்கமுற்றார். கடைசியாக ரைட் ஒனறபிள் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரி அவர்களே தந்தைக்கு ஆறுதல் கூறிச் சம்மதிக்க வைத்தார். தந்தையின்சிவிய காலத்திலேயே மணி பெரும் புகழையீட்டி இவன் தந்தை என்னோற்றான் கொல் என்று எல்லோராலும் சொல்ல வைத்தார்.

1930ம் ஆண்டில் மணி சென்னைப்பல்கலைக்கழகத்தின் இசைத்துறையில் ஒரு மாணவனாகச்சேர்ந்தார். அப்போது அத்துறைக்குத் தலைவராக இருந்த டைகர் வரதாச்சாரியார் தான் கல்லூரியில் இல்லாத சமயங்களில் மணியையே வகுப்புகளை நடாத்தும்படி கூறிச்செல்வார். டைகர் மணியைத் தனது சிஷ்யனாக ஏற்று மேலதிகமாகப் பாடஞ் சொல்லிக்கொடுப்பதுண்டு.

மைலாப்பூர் காபாலீஸ்வரர் கோயிலில் ஒவ்வொரு வருடமும் வசந்த உற்சவத்தின் போது ஓர் இசைவிழா நடப்பது வழக்கம். 1928 ம் ஆண்டு நடந்த விழாவிலே ஒரு நாள் பாடவிருந்த முசிரி சுப்பிரமணிய ஐயர் கச்சேரிக்குப் போக முடியவில்லை. அவருக்குப்பதிலாக ஜி என்பியைப்பாடும்படி கேட்டார்கள். அவரும் மிகவும் பயத்துடனும் பக்தியுடனும் பாடினார். கச்சேரி மிகவும் சிறப்பாக அமைந்தது. முடிவில் எல்லோரும் வெகுவாகப்பாராட்டினார்கள். இதுவே இவரது முதல் கச்சேரி. இதன்பின் பல இடங்களிலிருந்தும் பாடும்படி அழைப்புகள் வந்து குவிந்தன. மணியின் புகழ் எல்லாத்திக்குகளுக்கும் பரவியது. 1927ம் ஆண்டில் இளம் வித்துவான்களுக்கான மியூசிக் அகடமியின் தங்கப்பதக்கத்தைத் தட்டிக்கொண்ட இவர் பத்து ஆண்டுகளின்பின் 1937ல் அகடமியில் ஒரு முழுநேரக்கச்சேரி செயயும்படி அழைக்கப்பட்டார். இக்கச்சேரி இவரது இசைவாழ்வில் ஒரு முக்கியமான படிக்கல்லாக அமைந்தது.

இவருக்கு அநேகமாக கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையும் பாலக்காட்டுமணியும் அல்லது சௌடையாவும் பழனி சுப்ரமணிய பிள்ளையுமே பக்கவாத்தியம் வாசிப்பதுண்டு. இவர்கள் எல்லோரும் மணியின் பாட்டை நன்கு ரசித்து மிகவும் அனுசரணையாக வாசிப்பதனால் கச்சேரிகள் மிகவும் சிறப்பாக அமைந்து விடுகின்றன



இளம் வயதில்

முக்கியமாக ''மருவேலரா'', ''ஸரஸஸாமதான'',''சலமேலரா'',''தத்வமெருக'' ஆகிய கிருதிகள் மணி ஐயரின் அனுசரணையுடன் நன்கு சோபித்தன. கச்சேரி எங்கு நடந்தாலும் அங்கு மண்டபம் நிறைந்து விடுவதுமன்றி வெளியிலும் ஒரே சனத்திரளாக இருக்கும். இவரது கச்சேரியை ஒழுங்கு செய்வதானால் சில சமயங்களில் ஒரு வருஷத்துக்கு முன்னரே ''புக்கிங்'' செய்ய வேண்டும். ஒரு மாதத்தில் இருபது கச்சேரிகளுக்கு மேலும் நடந்ததுண்டு. ஆனந்தவிகடன்,கல்கி முதலிய பிரபல சஞ்சிகைகைகள் இவரது கச்சேரிகளை வர்ணிப்பதற்குப் போதிய அடைமொழிகளின்றித்திண்டாடின. ''மகத்தான



பூஜையில்

கச்சேரி'', ''மறக்க முடியாத கச்சேரி''; ''தெய்வீககானம்'' என்றெல்லாம் ஆரம்பித்து ''காந்தர்வகான கச்சேரி, ''ஜிஞ்ஜாமிர்தமான கச்சேரி'' என்றெல்லாம் வர்ணித்தன. இவருடைய ராகம் தானம் பல்லவி நிகழ்ச்சிகள் தனித்துவம் பெற்று விளங்கின. ராக ஆலாபனையின் சிறப்பு, தானம் பாடும் அழகு, ராகமாலிகை ஸ்வரம் முதலியன இந்நிகழ்ச்சிகளுக்கு மெருகூட்டின. சகானா, கானடா, பெஹாக், எது குலகாம்போதி, சிந்து பைரவி முதலிய மிகவும் ரம்மியமான ராகங்களில் ஸ்வரப்பிரஸ்தாரம் செய்வது ரசிகர்களுக்கு ஓர் இனிமையான விருந்தாகும். முன்னர் அதிகம் கேள்விப்படாத மும்மூர்த்திகளின் கிருதிகள் பலவற்றை இவர் புதிய மெருகுடன் பாடி அறிமுகப்படுத்தி வைத்தார். தீபகத்தில் ''களல நேர்ச்சின'', டக்காவில் ''ராகா சசிவதன'' மார்க்க ஹிந்தோளத்தில் ''சலமேலரா'', செஞ்சுகாம்போதியில்'' வர ராகலய,'' கீரவாணியில் ''எடியோசனுலு'' நாராயணியில் ''ராமா நீவே'' முதலிய பல உருப்படிகள் இவராலேயே வழக்கத்துக்குக் கொண்டுவரப்பட்டன. இவரது துக்கடாக்களும் கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கும்.

சுருதிபேதம் (அல்லது கிரகபேதம்) செய்யும் முறையை இவர் மிகவும் திறமையாகக் கையாண்டார். அப்போது அதற்கு வித்வான்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு இருந்தது. இதன் விளைவாக மியூசிக் அகடமியின் விற்பன்னர்குழு இதனை ஆராய்ந்து சுருதிபேதஞ் செய்வது சம்பிரதாய முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று என முடிவு செய்தனர். இவ்வளவு எதிர்ப்புகளிடையே மிகச் சிறப்பாகச் சுருதிபேதம் செய்து அதனை இசை உலகத்தில் ஏற்றுக்கொள்ளச் செய்த பெருமையும் இவரையேசாரும்.

தமிழிசை இயக்கம் சென்னையில் ஆரம்பித்த போதும் பல வித்வான்கள் அதனை எதிர்த்தனர். ஜீஎன்பி இதனை ஆதரித்ததுமல்லாமல் முதலாவது தமிழிசை விழாவில் பங்குபற்றிக் கச்சேரி செய்த ஒரே ஒரு சீனியர் வித்வான் இவரேயாவர். இதனைக் கண்டு அடுத்தடுத்த ஆண்டுகளில் வேறு வித்வான்களும் இவ்விழாக்களிற் கலந்து கொண்டனர்.

1955ல் ஆல் இந்தியா ரேடியோவின் சென்னைநிலையத்தில் சங்கீதத் தயாரிப்பாளர் ஆக நியமிக்கப்பட்ட இவர் பத்து ஆண்டுக

## சினிமா உலகில் ஜீஎன்பி

பாமா விஜயம், சதி அனுசூயா, ருக்மாங்கதா, வாசவதத்தை, சகுந்தலை, ஆகிய ஐந்து படங்களில் இவர் நடித்திருக்கிறார். சகுந்தலையில் துஷ்யந்தனாகத் திருமதி எம்.எஸ். சுப்புலெட்சுமியுடன் நடித்த பொழுது அதில் காம்போதியில் பாடிய விருத்தம் பலரைக் கவர்ந்தது. நாதஸ்வர வித்வான் திருவிடை மருதூர் வீருசாமிப்பிள்ளை இந்தக் காம்போதியைக் கேட்பதற்காக இப்படத்தைப் பல தடவை பார்த்திருக்கிறார். மகாராஜபுரம் சந்தானம் இந்தக் காம்போதியைக் கேட்டபின்தான் தனக்குச் சங்கீதத்தில் மிகவும் ஆர்வம் ஏற்பட்டதென்று கூறியுள்ளார்.

ளாக அங்கு மிகவும் திறமையாகக் கடமையாற்றினார். 1958ம் ஆண்டில் நடந்த சென்னை மியூசிக் அகடமியின் 32வது விழாவுக்குத் தலைமைவகித்து ''சங்கீத கலாநிதி'' பட்டம் பெற்றார். 1959ல் இவருக்கு இந்திய ஜனாதிபதியின் விருது வழங்கப்பட்டது. இவ்விருதை வழங்கிய அப்போதைய இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் ''என்னுடைய இனிய நண்பனின் மகனுக்கு இதை வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்'' எனக் கூறினார்.

இவ்விருது கிடைத்து சில நாட்களிலே இவருக்குச் சுகவீனந் தொட்டு விட்டது இதைக் கேள்விப்பட்டதும் இவரது ஆதரவாளர்களும் ரசிகர்களும் ஆழ்ந்த கவலைக்குள்ளானார்கள். விரைவிற் குணமடைய வேண்டுமென்று பிரார்த்தித்தனர். 1959ம் ஆண்டிலேதான் ஜிஎன்பி முதன் முதலாக மியூசிக் அகடமி விழாவில் பங்குபற்றவில்லை. அம்முறை இவருடைய பிரிய நண்பரான மதுரை மணி ஐயர் விழாவுக்குத் தலைமை தாங்கினார். அங்கு பிரசன்னமாயிருக்க முடியாததையிட்டு இவருக்கு மிகவும் கவலை. இதன் பிறகு 1960ம் ஆண்டு விநாயக சதுர்த்தியன்று வானொலியில் முதன் முதலாகப் பாடினார். பின் சிறிது சிறிதாகக் குணமடைந்து மீண்டும் கச்சேரிகள் செய்யத் தொடங்கினார்.

1964ம் ஆண்டு திருவனந்தபுரத்தில் ஸ்வாதித்திருநாள் சங்கீத அகடமியின் அதிபராயிருந்த காயகசிகாமணி முத்தையா பாகவதர் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து ஜிஎன்பி அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். நல்ல தேகசுகமில்லாமலிருந்தும் இப்பதவி



பாடங் கற்பித்தல்

## சாகித்ய கர்த்தா

ஜிஎன்பி ஏறத்தாழ 250 சிறந்த கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். சிறந்த சங்கீத வித்வானாகவும், சாகித்ய கர்த்தாவாகவும் இருப்பது மிகவும் அபூர்வம். இவரது பாடல்களிற் பல இவரது இஷ்டதேவதையான ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின்மீது பாடப்பட்டவையாகும். இவற்றுட் பல ஆந்தோளிகா, நளினகாந்தி முதலிய அபூர்வ ராகங்களில் அமைந்துள்ளன. இக் கீர்த்தனங்கள் யாவும் இவரது பிரதம சிஷ்யரான காலஞ்சென்ற டி. ஆர். பாலசுப்பிரமணியத்தினால் கச்சேரிகளிற் பாடப்பட்டன. கரிமுகவரதா (நாட்டை), ஸரஸ்வதி நமோஸ்துதே (ஸரஸ்வதி), ஸதாபாலய (மோகனம்), மறவனுனே (ஆரபி), மாரஜனகாடி (பகுதாரி), பராமுகமேல (கானடா), ரஞ்சனி நிரஞ்சனி (ரஞ்சனி), பாதபஜன (கமாஸ்) முதலிய பல பாடல்கள் இப்போது பலராலும் பாடப்பட்டு வருகின்றன. மோகனம், கமாஸ் ராகக் கீர்த்தனைகளில் பல்லவியின் ஆரம்பத்தில் ஸ்வராக்ஷர அணியைக் காணலாம். மேலும் ஆந்தோளிகா, ரஞ்சனி, கதனகுதூகலம் ஆகிய அபூர்வ ராகங்களில் வர்ணங்களையும் இயற்றியுள்ளார்.

யைச் செவ்வனே நடாத்தியதுமன்றி மாண வர்கட்கு ராக ஆலாபனை, கிருதிகளைப்பாடு தல், ஸ்வரப்பிரயோகம் முதலியவற்றின் நுண் ணிய அம்சங்களையும் சொல்லிக் கொடுத்தார். அவ்வருட இறுதியில் சென்னை மியூசிக் அக டமியில் நடாத்திய கச்சேரியே அங்கு நடை பெற்ற இவரது கடைசிக் கச்சேரியாகும். இதன்பின் 1965ம் ஆண்டு பங்குனி மாதம் டில்லியில் நடந்த இவரது இறுதிக்கச்சேரி மிகவும் நன்றாக அமைந்தது. இவர் அன்று பாடிய தோடியைத் "தன் உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு பாடினார்" என்று சுப்புடு விமர்சித்திருந்தார். அடுத்த மாதம் மறுபடி யும் சுகவீனமுற்று திருவனந்தபுரம் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டு மே மாதம் முதலாந்திகதி பல்லாயிரக்கணக்கான ரசிகர்க ளையும் தாங்கொணுத்துயரத்தில் ஆழ்த்தி இவ்வுலகைநீத்தார்.

இசையுலகில் அக்காலத்திலிருந்த மகா மேதைகளிடையே முடிசூடா மன்னனாக ஜி என்பி பாராட்டப்பட்டதன் காரணமென்ன? அவருடைய வசீகரதோற்றமா அல்லது கணீ ரென்ற சாரீரமா? கிருதிகளில் அவர் புகுத் திய புதிய இனிய சங்கதிகளா?ராக ஆலாபனை யின் சிறப்பா?ராகம் தானம் பல்லவியில் செய் யும் சுருதி பேதமா அல்லது ராகமாலிகை ஸ்வ ரப்பிரஸ்தாரமா?அதன் பின்பாடும் அவரது துக்கடாக்களா அல்லது அவருக்கே உரிய பிர்க்காக்களா? அல்லது அவரது கச்சேரி பந் தாவா? இவற்றில் எது என்று தனியாகச் சொல்ல முடியாமல் இவையெல்லாமே சேர்ந்து முழுமையான ஒரு அம்சம் என்றே கூறலாம். இசையுலகில் தனக்கென ஒரு புதிய பாணியை வகுத்துக் கொண்டவர். இப்புதியபாணி இளைய தலைமுறையினரை யும் இசைக் கலைஞர்களையும் வெகுவாகக் கவர்ந்தது. அவரது பரந்த சிஷ்யபரம்பரை யிலும் இது தொனிப்பதைக் காணலாம்.

ஜிஎன்பியின் இரண்டு கச்சேரிகள் ஒரே மாதிரியிருக்காது. ஒரே கீர்த்தனையைப் பல கச்சேரிகளிற் பாடினாலும் ஒவ்வொரு கச்சே சேரியிலும் அதில் ஒரு புதிய அம்சம் புகுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். டில்லியில் நடந்த ஒரு கச்சேரியில் காம்போதி ராகம் மிகவும் நன்றாக ஆலாபனை செய்து ஸ்ரீசுப்ரமண்யாய என்ற தீக்ஷிதர் கிருதியை எடுத்தார். அநுபல்லவியில் "வாஸவாதி' என்ற அடியைச் சாதாரணமாகவே பாடி முடித்தார். ஏனைய வித்துவான்களைப் போல அதில் நிரவலோ ஸ்வரப்பிரஸ்தாரமோ செய் யாததையிட்டு எல்லோருடைய முகத்திலும் ஓர் ஏமாற்றம் காணப்பட்டது. உடனே சரணத்தில் தாபத்ரய என்ற அடியில் மிகவும்அற்புதமாக நிரவல் ஸ்வரம்பாடியதும் சபையிலிருந்து பலத்த கரகோஷம் எழுந் தது. அதன்பின் பேசிய தீட்சிதர் கிருதிகளில் விற்பன்னரான நீதிபதி ரி. எல். வெங்கட் ராமையர் "இந்தக் கிருதியை எத்தனையோ வித்வான்கள் பாடியதைக் கேட்டிருக்கிறேன். ஆனல் இந்த அடியில் இப்படி ஒரு ஸ்வராக்ஷர சம்யோகம் செய்யலாமென்று இன்றுதான் உணர்ந்தேன். ஜிஎன்பி போன்ற மேதை களினலேதான் இவற்றைச் செய்யமுடியும்" என்று கூறினர்.

ஜிஎன்பியின் கச்சேரிகளைக் கேட்டு ரசித்தவர்கள் அந்த அநுபவங்களை என்றுமே மறக்க முடியாதெனலாம்.

டபிள்யு. எஸ். செந்தில்நாதன்.

ஆதாரம்: 1. G. N. B- A biography
2. Sruti, May 1984

---

சில வருடங்களுக்கு முன் மைலாப்பூர் ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் ஒரு நாள் மதுரை சோமசுந்தரத்தின் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. காம்போதி ராகம் பாடிக் கொண்டிருந்த அவர் இடையில் பாடுவதை நிறுத்தி ஒரு குட் டிப் பிரசங்கம் செய்தார்.

"இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னடி இதே ஹாலிலே மகாமேதை ஜிஎன்பி காம்போதி ராகம் பாடினர். அது இன்னும் என் காதிலே ஒலித்துக் கிட்டே இருக்கு" என்று கூறி ஜிஎன்பி யின் பிர்க்கா ஒன்றை அடித்துவிட்டார். உடனே சபையில் ஒரேஅப்ளாஸ்.

## ஒரு மகத்தான கச்சேரி

*1944ம்* வருஷம் முதல்தேதியன்று தமிழிசை மகாநாட்டில் ஒரு மகத்தான கச்சேரி நடந்தது. பாடியவர் ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமணியம்; பக்கவாத்தியங்கள்: ஸ்ரீராஜ மாணிக்கம்பிள்ளை, பாலக்காட்டு மணி, பழனி சுப்ரமணியபிள்ளை.

இன்றைக்குத் தமிழ்நாட்டு சங்கீத மேடையில் முதன்மை ஸ்தானத்தை வகிக்கும் வித்வான் ஜி என் பி. பக்கவாத்தியக்காரர்களும் அப்படியே அவரவர்களுடைய வாத்தியத்தில் முதன்மையாயிருப்பவர்கள்.

இந்த வருஷம் மூன்று சங்கீத விழாக்களிலும் கச்சேரி செய்தவர் ஜி. என்.பி. ஒருவர்தான். மூன்று கச்சேரிகளையும் கேட்ட ஜி. என்.பி. விசிறிகள் "இதை விட அது ஒசத்தி; அதை விட இது ஒசத்தி" என்று ஒப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். தமிழிசைக் கச்சேரி ஒன்றுதான் நான் கேட்டதாகையால், அது எனக்கு ரொம்ப ஒசத்தியாகத் தோன்றியது.

"தண்டனிட்டேனென்று சொல்லடி' என்னும் ஸ்ரீராமலிங்க சுவாமிகளின் கீர்த்தனத்துடன் கச்சேரி ஆரம்பமாயிற்று. பைரவியில் "யாரோ இவர் யாரோ" என்னும் அருணாசலக் கவியின் கீர்த்தனம் கர்ணாமிர்தமாயிருந்தது. கல்யாணி ராகத்தைக் கரகோஷ ஆரவாரத்துக்கிடையே ஆலாபனம் செய்து "ஏதாவுனரா" என்னும் தியாகராஜ கீர்த்தனம் பாடி ஸ்வரவிஸ்தாரம் செய்தார். இவ்விடத்தில் பக்க வாத்தியக்காரர்கள் தங்கள் கைவரிசைகளைக் காட்ட ஆரம்பித்தார்கள். பாலக்காட்டு மணியும் பழனி சுப்ரமணிய பிள்ளையும் மாறிமாறிச் சுமார் 45 நிமிஷம் ஆவர்த்தனம் வாசித்தார்கள். ஒருவருக்கொருவர் பஞ்சையில்லை என்று தோன்றும்படி அமர்க்களமாக வாசித்தனர். முடிவில் இருவரும் சேர்ந்து வாசித்த போது இவர்களுடைய விரல்களும் இயந்திரத்தினால் இயங்குவது போல் அதிசய ஒற்றுமையுடனும் விரைவுடனும் இயங்கிச் சபையினரை உற்சாக வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டன.

"ஆடுந்தெய்வம்" 'இனியொரு கணம்' ஆகிய கீர்த்தனங்கள் வழக்கம் போல் நன்கு அமைந்தன. காம்போதி ஸ்வரத்தில் ஸ்ரீராஜமாணிக்கம்பிள்ளை புங்கானு புங்கமாக வாசித்துச் சபையில் இசைவெள்ளம் பெருகும்படி செய்தார்.

முக்கிய ராக ஆலாபனத்துக்கு எடுத்துக்கொண்ட சிம்மேந்திரமத்தியமத்தில் பாடகர் சுருதி பேதம் செய்து மாயா மாளவ கௌளையின் சாயை காட்டினார்.

பல்லவிக்குப் பிறகு இரண்டு தமிழ் உருப்படிகள் பாடியதும் காலம் சரியாய்ப் போய் விடவே 'பவமான' என்னும் மங்களத்தைப்பாடினார். உடனே பாதிப்பேர் எழுந்தார்கள். பாக்கிப்பாதிப்பேரிடையே சிறிது பரபரப்பு ஏற்பட்டது. "வாழிய செந்தமிழ்" என்ற பாரதியாரின் பாட்டை ஜிஎன்பி எடுத்ததும் அந்தப் பரபரப்பு அடங்கியது.

இந்தக் கச்சேரிக்கு முதல் நாள் தான் அகடமியில் பிரபல வித்துவான்கள் பலர் கூடி "தமிழிசை இயக்கத்தினால் கர்நாடக சங்கீதமே நாசமாகி விடும்" என்று தீர்மானம் செய்திருந்தார்கள். இப்படியெல்லாமிருந்தும் ஜிஎன்பி தமிழிசை மகாநாட்டில் வந்து கச்சேரி செய்தது அவருடைய விரிந்த நோக்கத்திற்கும் தமிழ்ப் பொது மக்களின் அபிப்ராயத்துக்கு அவர் அளிக்கும் மரியாதைக்கும் சிறந்த அத்தாட்சியாக இருந்தது.

ஆதாரம்: "சங்கீத யோகம்" — கல்கி
மார்ச்சு 1947

---

அண்மையில் சென்னையில் காலமான பிரபல கலைஞர்கள்:

வைணிக வித்வான் தேவகோட்டை நாராயண ஐயங்கார் (வயது 81) — 9-1-87

வயலின் வித்வான்கள் வி. கோவிந்தசாமி நாயக்கர் (வயது 71) — 13-2-87,

டி. கேசவலு (வயது 63) 28-7-87

மிருதங்க வித்வான்கள் பாலக்காடு ஹரிஹரன் வயது 53) 21-3-87, கல்பாத்தி ஏ. ராமநாதன் 24-12-86.

பிரபல தமிழறிஞரும் வாக்கேயகாரருமான எம்.பி. பெரியசாமி தூரன் (வயது 78) 20-1-87

# ஜிஎன்பியின் சிஷ்ய பரம்பரை

**சிஷ்யர்கள்**

டி. ஆர். பாலசுப்ரமணியம் ✱

எம். எல். வசந்தகுமாரி

எஸ். கல்யாணராமன்

டி. வி. விஸ்வநாதன்

டி. எஸ். பாலசுப்ரமணியம்

எல். கிருஷ்ணன்

சோமேஸ்வர பாபு

மதுரை கணேசன்

திருச்சூர் வி. ராமச்சந்திரன்

கோமாட்டில் சகோதரிகள்

ராகினி ✱

பி. எஸ். தியாகராஜன்

ரங்கா துரை

✱ இவ்விருவரும் தம் குருவுக்கு முன்னமே காலமாகி விட்டனர்.

> எதையும் எளிதில் கிரகிக்கக்கூடிய சக்தி ஜி என் பிக்கு உண்டு. ஒரு சமயம் ஹிந்துஸ்தான் பாடகராகிய படே குலாம் அலிக்கான் 'காவதி' என்ற ராகம் பாடினார். அது ஒரு வக்ரராகம்; பாடுவது மிகவும் சிரமம். ஆனால் ஜி. என். பி. அடுத்த நாள் ஒரு சபாக்கச்சேரியில் ராகமாலிகையாகச் சுலோகம் பாடியபோது காவதிராகத்தையும் பாடிக் காட்டினார்.
>
> எம். எல். வி

**சிஷ்யர்களின் சிஷ்யர்கள்**

டி. ஆர். பாலசுப்ரமணியம்

*ராதா, ஜெயலக்ஷ்மி*

✱ ✱ ✱

எம். எல். வசந்தகுமாரி

*நிர்மலா ஸ்ரீநிவாசன்*
*டி. எம். பிரபாவதி*
*வனஜா நாராயணன்*
*சாருமதி ராமச்சந்திரன்*
*யோகம் சந்தானம்*
*சுதா ரகுநாதன்*
*சரஸ்வதி ஸ்ரீநிவாசன்*
*மீரா சுப்ரமணியம்*

✱ ✱ ✱

தஞ்சாவூர் எஸ். கல்யாணராமன்

*பிரேமா ஹரிஹரன்*
*கௌரி குப்புஸ்வாமி*
*பட்டாபிராமன்*
*சுப்புலெட்சுமி சுவாமிநாதன்*
*பூஷணி கல்யாணராமன்*
*எஸ். மாதங்கி*
*பி. பிருந்தா*
*மீரா பார்த்தசாரதி*
*மரகதம் ராமசாமி*
*ஜெயந்தி வெங்கட்ராமன்*

# தியாகராஜர் கிருதி விளக்கம்

ராகம்: தர்பார் தாளம்: ஆதி

பல்லவி

யோசனு கமலலோசனு நனுப்ரோவ

அநுபல்லவி

ஸூசன தெலியக நொருல
யாசன சேது நநுசுநீகு
தோசன த்யுதி விஜிதாயுத வி
ரோசன நனுப்ரோவ நிங்க (யோ)

சரணம்

கேசன நிஜபக்த நிசயபாபவி-
மோசன கல பிருது லெல்ல
கொனி நன் -
நேசன க்ருதவிபி நசர வராபி
ஷேசன த்யாகராஜய பூஜித
(யோ)

தாமரைக் கண்களை யுடையவனே! என்னைக் காப்பதற்கு இன்னும் யோசனையா?

இரகசியம் அறியாமல் நான் உன்னையன்றி வேறொருவரை இரப்பேன் என்று உனக்குத் தோன்றியதா? கணக்கற்ற சூரியர்களின் ஒளியையும் வெல்லக்கூடிய தேசோமயமானவனே! என்னைக் காத்தருள இன்னும் (யோசனை?)

அனேக மெய்யடியார்களின் பாவங்களை ஒழித்தவன் என்ற விருதை யுடையவனே! காட்டில் சஞ்சரிப்பவனுக்குக் கூட (சுக்ரீவனுக்கு) பட்டாபிஷேகம்செய்து வைத்தவனே! தியாகராஜனல் பூசிக்கப்படுவனே! இன்னும் என்ன யோசனை?

## சீர்காழியின் பரிசு

1949 அம் ஆண்டு மைலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூலில் ஒரு பல்லவிப் போட்டி நடைபெற்றது. அதற்கு முடிகொண்டான் வெங்கட்ராமையரும் ஜிஎன்பியும் பாலக்காட்டு மணியும் நடுவர்களாக இருந்தனர். போட்டியில் சீர்காழி கோவிந்தராஜனும் பங்குபற்றினர். அவர் தனது பல்லவியைப் பாடிமுடிந்ததும் நடுவர்கள் அவரைமேலும் சோதிக்க விரும்பி ஜிஎன்பியிடம் அந்தப் பொறுப்பை விட்டனர். ஜிஎன்பி சங்கராபரணத்தில் " மஹிம தெலிய தரமா " என்ற பல்லவியைச் சில தடவைகள் பாடிப் பின் சீர்காழியைப் பாடும்படி கேட்டார். அவர் தெண்டித்தார் ஆனல் முடியவில்லை. முடிகொண்டான் சில தடவைகளும் பாலக்காட்டு மணி சில தடவைகளும் மேலும் பாடிக்காட்டினர். அதன்பின்னும் சீர்காழியால் முடியவில்லை. இறுதியாகச் சீர்காழியைத் தன்னுடன் கூடவே பாடும்படிகூறி ஜிஎன்பி சில தடவைகள் பாடினர். அதன்பின்தான் அவருக்குப் பிடிபட்டது. மிகவும் சிறப்பாகப் பல்லவியைப் பாடித் தம்பூராப் பரிசையும் தட்டிக்கொண்டார் சீர்காழி.

# ந. சண்முகரத்தினம் ஒரு சிறந்த வித்வான்

பேராசிரியர் சு. வித்தியானந்தன், துணைவேந்தர், யாழ். பல்கலைக் கழகம்

ஈழத்தின் சிறந்த இசைவித்துவானாகிய இசையரசு ந. சண்முகரத்தினத்தைப்பற்றி எழுதுவதற்கு எனக்கு என்ன தகுதியிருக்கிற தென்று எண்ணிப் பார்த்தேன். இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இயங்கிவரும் வளாகம் முன்னர் பரமேஸ்வராக் கல்லூரி யாக இருந்தது. அக்கல்லூரியில் பதினெட்டு ஆண்டுகளாக இசையாசிரியராகப் பணியாற் றியவர் இசைப்புலவர் அவர்கள். எனது ஆசான் உயர்திரு விபுலானந்த அடிகள் முதற்றமிழ்ப் பேராசிரியராகப்பணியாற்றிய அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திற் படித்தவர். யாழ் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் நுண்கலைப்பிரிவின் தேர்வுகட்கு வெளிவாரிப் பரிசோதகராகக் கடமையாற்றியவர். இந்த மூன்று வகையில் அவரைப்பற்றி எழுத எனக்கு உரிமையுண்டு என்று கருதுகின்றேன்.

உடுவிற் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இளமையிலே தனது பாட்டன் சிவரத்தினம், தந்தை நவரத்தினம் முதலியோருடன் இசைமயமான சூழலில் வளர்ந்தார். இதனால் 5 வயது முதலே திருமுறைப்பாடல்களைப்பாடும் ஆற்றல் பெற்றார். இயல்பாகவே பாட்டுப் பாடும் திறனைக் கண்ட இவரின் பாட்டனார் இவரை 7 வயதிலே தென்னிந்தியாவிற்கு அழைத்துச் சென்று, திருநெல்வேலி ஜமீன்தார் பள்ளிக் கூடத்திற் கல்வி கற்கவும், ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் அவர்களிடம் இசை பயிலவும், சுந்தர பாகவதரிடம் பக்திப் பாடல்கள் பயிலவும் ஒழுங்கு செய்தார்.

1926ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வந்து, சிலவாண்டுகள் இந்துக் கல்லூரியிற் கல்வி கற்றபின், மீண்டும் தமிழகம் திரும்பி இசை பயின்றார். 21ம் வயதில் சண்முகரத்தினம் அவர்கள் மலேசியாவிற் குடியமர்ந்திருந்த தந்தையிடம் சென்று, அரசாங்க அலுவலராக கடமையாற்றிய போது வித்துவான் சின்னத்துரை ஐயரிடம் இசைப் பயிற்சி பெற்றார். நுண்கலை ஆர்வத்



தால் உந்தப்பட்டு, அரசாங்க அலுவலர் பதவியை உதறி விட்டு, சென்னை மாநகருக்கு வந்தார். அங்கேயிருந்து சிதம்பரம் சென்று பலவாண்டுகள் தண்டாயுத தீட்சிதரிடம் இசை நுட்பங்களை கற்றறிந்து, பின் தென்னிந்திய அரங்குகளில் கச்சேரி செய்யத் தொடங்கினார்.

1941 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து தலைசிறந்த இசைப் பேரறிஞர்களான பொன்னையாபிள்ளை, டைகர் வரதாச்சாரியார், சுவாமிநாதபிள்ளை' தண்டாயுத தீட்சிதர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை ஆகியோரிடம் இசைப் பயிற்சி பெற்றார். பல்கலைக்கழக மாணவராகவிருந்த காலத்திலேயே திருச்சி வானொலி நிலையத்தில் முழுநேரக் கச்சேரி செய்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சங்கீத பூஷணம்

தேர்வில் 1ம் பிரிவிலே திறமைச் சித்தி பெற்றுத் தங்கப் பதக்கத்தினையும் சங்கீத வித்துவ சபையினரின் பரிசில்களையும் ஈட்டிக் கொண்டார். யாழ்ப்பாணக் கல்லூரியில் இரு ஆண்டுகளும், பரமேஸ்வராக் கல்லூரியில் 18 ஆண்டுகளும், பண்டடத்தரிப்புக் கல்லூரியிலும் இசையாசிரியராகக் கடமையாற்றினர். கிழக்கு மாகாணம் மட்டு நகரிலும் ஆசிரியத் தொழில் செய்து மட்டக்களப்பிலும் சங்கீத வளர்ச்சிக்குப் பணியாற்றிப் பல சிடர்களை உருவாக்கினர்.

ஒலிபரப்புத்துறைகளில் இவர் ஆற்றிய சேவை மகத்தானது. 1971 ஆம் ஆண்டில் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நியமனம் பெற்ருர். இசைப் பயிற்சி, இசைச் சித்திரங்கள், பண்ணிசைப் பயிற்சி, வாத்திய விருந்து போன்ற நிகழ்ச்சிகளை நன்கு தயாரித்தளித்தார். இலங்கை வானொலியில் அதியுயர்பிரிவுக் கலைஞராக பலவாண்டுகள் பாடினர். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் நடுவர்களில் ஒருவராகப் பலதடவை பணியாற்றியிருக்கின்றார். 1948 இல் இசைத்தமிழ் நிலையம் ஒன்றை உடுவிலில் நிறுவி இசை வகுப்புக்களையும், விழாக்களையும் பலவாண்டுகளாக நடாத்தினர். பிரபல இந்தியக்கலைஞர்களை அழைத்து இசைக்கச்சேரிகள் அமைத்தார். 'நாதம்' என்ற மாத இதழைச் சிலவாண்டுகளாக வெளியிட்டு அரும்தொண்டாற்றினர். இவரிடம் இசை பயின்றவர்கள் இன்று மாபெரும் கலைஞர்களாகவும் ஆசிரியர்களாகவும் விளங்குகின்றனர்.

வட"இலங்கைச் சங்கீத சபை நிருவாக உறுப்பினராகவும் பலவாண்டுகள் கடமையாற்றினர்.

இவர் ஈழத்திற் பற்பல பாகங்களிலும் தென்னிந்தியாவிலும், மலேசியாவிலும் செய்த இசைக் கச்சேரிகள் எண்ணிறந்தவை. இவர் பெற்ற பட்டங்களுட் சங்கீத ரத்தினம், கான வித்தியா பூஷணம், கான வாரிதி, கலைச்சுடர், ஏழிசைக்குரிசில், இசைப் புலவர், இசையரசு, இசைச்சக்கரவர்த்தி என்பன குறிப்பிடத்தக்கவை. 1982ம் ஆண்டில் வட இலங்கைச் சங்கீத சபையினர் பொன் விழா மகாநாட்டில் இவருக்குப் பொன்னாடை போர்த்தி 'இசைவேந்தர்' என்ற விருதினை வழங்கினர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினர் சில மாதங்கட்கு முன் சான்றோருக்கு அளித்த விருது விழாவில் இவருக்கு இசைமாமணி என்னும் பட்டத்தினை வழங்கினர். அண்மையில் பிரதேச அமைச்சர் செ.இராஜதுரை அவர்கள் நடாத்திய விருது வழங்கும் விழாவிலும் இவர் கௌரவிக்கப்பட்டார்.

ஈழத்திலிருந்து அகில இந்திய வானொலி நிலையத்தில் அரங்கிசை செய்த முதலிசை அறிஞராகிய இவர் 1943ம் ஆண்டு முதல் 1969ம் ஆண்டு வரை $1\frac{1}{4}$ மணித்தியாலம் வானொலிக் கச்சேரி செய்தார். அதேகாலத்தில் மலேசிய வானொலி நிலையத்தில் அதியுயர் தரக் கலைஞராக மதிக்கப்பட்டு இசைக் கச்சேரிகளை அளித்து வந்தார்.

சுருங்கக்கூறின் தமது எழுபத்திரண்டு வயது காலத்திற் பெரும்பாலான பகுதியை இசை வளர்ச்சிக்குச் சமர்ப்பித்துள்ளார். இவருடைய இசைத்திறனை உலகப் பிரசித்தி பெற்ற கலைஞர்கள் பலர் பாராட்டியுள்ளனர். நாதஸ்வரவித்துவான் திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளை இவருக்குப் பொன்னாடை போர்த்தி "உங்கள் கச்சேரிக்கு இந்தியாவிலிருந்து தான்பக்க வாத்தியகாரர்களை வரவழைக்க வேண்டும்" என்று புகழாரம் சூட்டினர். புகழ் பெற்ற வீணைமேதை திரு. எஸ். பாலச்சந்தர் யாழ்ப்பாணம் வந்த போது, இவரது கச்சேரியில் இவர் பாடிய சாவேரி, கல்யாணி ஆகிய இரு இராகங்களையும் கேட்டுச்சுவைத்து, "என் உயிருள்ளவரை இந்த இரு இராகங்களையும் மறக்க மாட்டேன் உங்கள் கச்சேரியை மீண்டும் மீண்டும் கேட்க நான் விரும்புகின்றேன். இந்தியாவிற் வாருங்கள்; அங்கு மியூசிக் அக்கடமி விழாவிலே கச்சேரிகளைச் செய்ய ஒழுங்கு செய்வேன்" என்று அழைப்பு விடுத்தார். ஈழத்திலிருந்து முதுபெரும் இசைக்கலைஞராக விளங்கிய சண்முகரத்தினம் அவர்களுக்குப் பல சங்கங்கள் விருதுகள் வழங்கிய பொழுதும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இவருக்கு பெரும் மதிப்பு இருந்த போதும் ஜனதிபதி இவருடைய சேவையை மதித்து ஆண்டுதோறும் வழங்கி வரும் இசை விருதை வழங்காமல், தமிழ்க் கலைஞர்களை அலட்சியம் செய்து



சில ஆண்டுகளுக்கு முன் யாழ். நுண்கலை மன்றத்தில் திரு. சண்முகரத்தினம் பாடினார். திரு. சண்முகராகவன் (மகன்) உடன் பாடினார். திரு. பிரணவநாதன் (மகன்) மிருதங்கமும், திரு. வி. கே. குமாரசாமி வயலினும் வாசித்தார்கள்.

வருகிறது. சிங்களக் கலைஞர்களுக்கு இதுவரை காலமும் விருதுகளும் பெருந்தொகையான பணப் பொற்கிழிகளும் ஒய்வூதியங்களும் வழங்கிவரும் சிங்கள அரசு இசைமன்னன் சண்முகரத்தினம் போன்றவர்கட்கு அத்தகைய சிறப்புகளை நோய்வாய்ப்பட்டிருக்கும் காலத்தில் அவருக்குவாழ்வதற்கு ஏற்ற வசதிகளை வழங்காதிருந்தது கவலைக்குரியது.

இவருடைய குடும்பமே கலைக்குடும்பம்; இவருடைய மனைவி இசையாசிரியையாகப் பணியாற்றுகிறார். ஆண்பிள்ளைகள் இருவர் தந்தையின் இசைப்பாரம்பரியத்தை வளர்த்துச் செல்கிறார்கள். மகன் சண்முகராகவன் 'இசை இளவரசு',மகன் பிரணவநாதன் மிருதங்க வித்துவான், மகள் ஸ்ரீகாந்தி கலை மாமணிப்பட்டம் பெற்றவர். கலைக்குடும்பத்திலே பிறந்து கலைப்பரம்பரையை எமக்கு வழங்கி, சாவகச்சேரியில் இயலிசை ஆடல் நிலையத்தின் இயக்குநராக விளங்கிய சண்முகரத்தினம் அவர்கள், ஈழம் தந்த இணையற்ற இசைமேதை. முறையான குருகுலவாசத்தாலும், இசைமேதைகளின் வழிகாட்டலாலும் மெருகேறிய இசைஞானம் பெற்றுத் தனக்கெனத் தனிவழி வகுத்து சுவைஞர்களின் உள்ளங்களிலே நீங்காத இடத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டார். எல்லா ராகங்களையும் திறமையாகக் கையாளவல்ல இசைப்புலவர் பிலஹரி பாடக் கேட்பது தனியான ஒரு அனுபவமெனக் கூறுவர். விருத்தங்களை ராகமாலிகையாகப் பாடுவதில் நிகரற்றவர்.

இவரது சாரீர வசதி மிக இனிமையானதொன்றாகும். கர்நாடக இசையுடன் பண்ணிசை, விருத்தங்கள், அருட்பாக்கள் பாடுவதில் மிக ஏற்ற வளமான சாரீரம் கொண்டவர். இவர் தமிழிசைக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தமிழ்ப் பாடல்களை பெரும்பான்மையாகப் பாடுவது விதந்து கூறப்பட வேண்டியது. ஈழத்திலும் தமிழகத்திலும் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இசைத்துறையிலே சக்கரவர்த்தியாக விளங்கிய இசைமாமணி சண்முகரத்தினம் அவர்களின் பெயர் ஈழத்து இசை வரலாற்றிலே தனியிடம் பெற்று விட்டது.

*

# கலைப்புதிர்

1. ஸ, ரி, க, ப, த, ஸ என்னும் ஸ்வரங்களை ஆரோகணமாகக் கொண்ட 6 ராகங்கள் கூறுக.

2. இரு ராகங்களின் பெயர்களை ஒன்றுகச் சேர்த்தால் அது இன்னொரு ராகத்தின் பெயராக வரும் ஆறு ராகங்களைக் கூறுக.

3. பின்வரும் 2ம் கலத்தில் உள்ள வாக்கேயகாரர் 1ம் கலத்தில் உள்ள ஒரு ஊரைச் சேர்ந்தவர்; அவற்றைச் சரியாக இணைக்கவும்:

| | |
|---|---|
| மைசூர் | வேங்கடசுப்பையர் |
| பாபநாசம் | விசுவநாதசாஸ்திரி |
| ஊத்துக்காடு | வாசுதேவாச்சார் |
| மாயூரம் | தியாகையர் |
| திருவொற்றியூர் | சிவன் |

4. பின்வரும் 1ம் கலத்திலுள்ள ஒரு ஊரைச் சேர்ந்த 2ம் கலத்திலுள்ள ஒரு பிரபல வித்து வான் 3ம் கலத்தில்உள்ள வாத்தியத்தில் புகழ் பெற்றவர். அவற்றைச்சரியாக இணைக்கவும்

| | | |
|---|---|---|
| 1) பல்லடம் | விசுவநாதஐயர் | வயலின் |
| 2) திருவெண்காடு | ராஜமாணிக்கம்பிள்ளை | மிருதங்கம் |
| 3) பாலக்காடு | ராமானுஜஐயங்கார் | கடம் |
| 4) கும்பகோணம் | மணிஐயர் | புல்லாங்குழல் |
| 5) குற்ருலம் | சுப்பிரமணியபிள்ளை | பாட்டு |
| 6) அரியக்குடி | சஞ்சீவராவ் | நாதஸ்வரம் |

5. பின்வரும் வரிகள் எந்தெந்தக் கீர்த்தனைகளில் வருகின்றன? அவை என்ன ராகங் களில் அமைந்துள்ளன?

1) எந்து போது நே நேமிசேயுதுனு
எச் சோடநி மொரபெட்டுதுனு

2) பாசாங்கு சேஷ தண்டகரே அம்ப
பராத்பரே நிஜபக்தபரே

3) வள்ளுவன் மறையும் மணிமேகலையும்
வளையாபதியும் குண்டலகேசியும்

(விடைகள் 22 ம்பக்கம்)

## நன்றி . . .!

சில மாதங்களின் முன் நான் சென்னையிலிருந்தபோது அங்கு வெளியாகும் 'ஸ்ருதி'' என்னும் இசை, நடன ஆங்கில ஏட்டின் பிரதம ஆசிரியரான டாக்டர் என். பட்டாபிராமன் அவர்களை, அவரது இல்லத்திற் சந்தித்தேன். அப்போது இப்படி ஒரு மலரை நம் நாட்டிற் பிரசுரிக்க எடுக்கும் முயற்சியைப்பற்றி அவருடன் உரையாடும் சந்தர்ப் பம் கிடைத்தது. அவர் என்னை மிகவும் உற்சாகப்படுத்தியதுமல்லாமல் கலையறிவைப் பரப்பு தலே தமது சஞ்சிகையின் நோக்கமென்றும் எனவே தமது சஞ்சிகையில் வெளிவரும் கட்டுரை களை எமது இதழ்களிற் பிரசுரிப்பதற்குத் தமக்கு ஓர் ஆட்சேபனையுமில்லையென்றும் கூறினர். அன்னர் எமக்களித்த ஆக்கத்துக்கும், ஆதரவுக்கும் எமது வாசகர் சார்பில் அன்னருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

—நிர்வாக ஆசிரியர்

# பூஷணி கல்யாணராமன்



பல ஆண்டுகளாக நம்நாட்டுக்கலைஞர்களிற் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று தம் கலைத்திறனைக் காட்டிப் பாராட்டுப் பெற்றிருக்கிறார்கள். எனினும் ஏனைய நாடுகளிலும் நம்கலைகளின் தாயகமாகிய தமிழ் நாட்டிலே கலை நிகழ்ச்சிகள் நடாத்திப் போற்றப்பட்டவர்கள் மிகச்சிலரே. அச்சிலரில் திருமதி பூஷணி கல்யாணராமனும் ஒருவராவர்.

குலபூஷணியின் தந்தையாராகிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சதாசிவம்பிள்ளை குலசேகரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்துச் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். பண்ணிசையில் மிகுந்த தேர்ச்சியுடையவர். கொழும்பு றோயல் கல்லூரியிலே சங்கித ஆசிரியராக இருந்து இளைப்பாறியவர். பூஷணி தனது பத்தாவது வயது தொடக்கம் தனது தந்தையாரிடம் சங்கீதம் முறையாகப் பயின்றார். சிறுவயதிலே மிகவும் உருக்கமாகப் பண்ணிசை பாடிக் கேட்போரை மெய்சிலிர்க்கச் செய்வார். பின் சென்னையில் அரசினர் மியூசிக் கல்லூரியிற் சேர்ந்து 1974 ம் ஆண்டு சங்கித வித்வான் சோதனையில் வாய்ப்பாட்டில் முதலாவதாகச் சித்தியடைந்து தங்கப்பதக்கத்தைத் தட்டிக்கொண்டார். பின்னர் தமிழ் நாட்டின் பிரபல சங்கிதமேதையாகிய ஜி. என். பாலசுப்பிரமணியம் அவர்களின் சிஷ்யரான பிரபல சங்கிதவித்வான் தஞ்சாவூர் எஸ். கல்யாணராமனிடம் உயர் சங்கீதப்பயிற்சிபெற்றார். 1976 ம் ஆண்டில் சங்கித வித்வான் பரீட்சையில் வீணையிலும் முதலாவது பிரிவிற் சித்தியடைந்தார். இவரது வீணை, வாய்பாட்டு அரங்கேற்றம் கொழும்பில் 1977 ம் ஆண்டு மிகச்சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் கலைக்கல்லூரியில் நான்கு வருடங்களுக்கு மேலாக விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் திரு கல்யாணராமனின் வாழ்க்கைத் துணைவியும் சிஷ்யையுமாகி இப்போது சென்னையிலேயே நிரந்தரமாக வாழுகின்றார்.

இவர் இயற்கையாகவே கொண்டுள்ள வளமான சாரீரம் மூன்று ஸ்தாயிகளிலும் மிகவும் இனிமையாக ஒலிக்கும். இளம் வயதிலேயே பல தங்கப்பதக்கங்களையும் பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ள இவருக்கு 1972ம் ஆண்டு காஞ்சிபுரம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் "சிவகான ரஞ்சிதம்" என்னும் பட்டமளித்தார். 1974 ம் ஆண்டு இந்தியன் இன்ஸ்ரிரியூட் ஒவ் ரெக்னோலொஜியினால் நடாத்தப்பட்ட அகில இந்தியப் போட்டியில் முதலாவது இடத்தைப்பெற்றார்.

சென்னை மியூசிக் அக்கடமி, கிருஷ்ண கானசபா, இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி, சரஸ்வதி, நாதோபாஸனை, ராகதரங்கிணி, கல்கத்தா பைன் ஆர்ட்ஸ் ஆகிய சபாக்களில் நடைபெற்ற இவரது கச்சேரிகள் ரசிகர்களால் நன்றாகப் பாராட்டப்பெற்றன 1985 ம் ஆண்டில் கிருஷ்ண கானசபா நடாத்திய "இளங் கலைஞரை ஊக்குவித்தல்" போட்டியில் முதலாவது பரிசையும் சென்ற டிசம்பர் மாதம் சென்னை மியூசிக் அக்கடமியில் நடந்த இசைவிழாவில் "புரொமிசிங் ஆர்ட்டிஸ்ட்" முதலாவது பரிசையும் பெற்றார். அவ்விழாவில் நடைபெற்ற இவரது கச்சேரியின்போது மண்டபம் நிறைந்து காணப்பட்டது. அன்று மிகவும் திறமையாகப்பாடி ரசிகர்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றார். (இக்கச்சேரியைப் பற்றி தினமணிப்பத்திரிகையில் வெளிவந்த விமரிசனம் இவ்விதழில் பிரசுரிக்கப்படுகிறது) இரண்டு மாதங்களுக்கு

முன்னர் இந்திய சுதந்திர தினத்தன்று சென்னை ஜார்ஜ்டவுண்பக்த ஜனசபையினால் இவருக்கு "மதுர கானவாணி" என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

தனது ஆரம்ப இசைக்கல்விக்குத் தனது தந்தையாரும் இப்போது இசையில் தனது முன்னேற்றத்துக்குத் தனது கணவருமே காரணமென்று மிகவும் பெருமையுடன் கூறிக்கொள்கிறார் பூஷணி; சென்னையிலே தரமான இசைக்கலைஞர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கின்றனர்; அவர்களிடையே கடும் போட்டி நிலவுகிறது. எனினும் இத்தனைப் போட்டியின் மத்தியிலும் பூஷணி ஓரளவு முன்னேறிக்கொண்டு வருவது மிகவும் சாதுர்யமானது என்று பூரிப்புடன் கூறுகிறார் கணவர்.

கமாஸ்

(இவர்களிருவரும் சென்ற ஜனவரி மாதம் ஆஸ்திரேலியாவிற்குச் சென்று அங்கு பல்வேறு இடங்களில் கச்சேரிகள் செய்து வருகின்றனர். ஆடி மாதமளவில் தாய்நாடு திரும்புவார்கள்.)

## சென்னை மியூசிக் அகடமியில்!

அன்று பிற்பகல் ஒருமணிக்கு பூஷணி கல்யாணராமன் ஒரு இசை நிகழ்ச்சியை அளித்தார். அவருக்கு கே. சிவராமனும் (வயலின்) உமையாள்புரம் மாலியும்(மிருதங்கம்) பக்கவாத்யமாக அமைந்தனர்.

பூஷணிக்கு மூன்று ஸ்தாயிகளிலும் துல்லியமாக ஒலிக்கக்கூடிய இனிமையான சாரீரம். சாரீரத்தில் நல்ல உதவுபடியும் தென்படுகிறது. நல்ல ஞானபாவத்துடன் பாடுகிறார். இவர் காலஞ்சென்ற இசை மேதை ஜி. என். பாலசுப்பிரமண்யத்தின் சீடரும், சிறந்ததொரு இசைக்கலைஞருமான தஞ்சாவூர் எஸ். கல்யாணராமனின் சீடரும் வாழ்க்கைத்துணைவியுமாவார். நிகழ்ச்சியை ஜி. என். பி. யின்ரஞ்சனி ராகவர்ணத்துடன் தொடங்கினார். இவரது "லதாங்கி" ராக ஆலாபனை பளிச்சென்றிருந்தது. பட்டணம் சுப்ரமண்ய அய்யரின் 'மரிவேர' கிருதியில் "தரலோன நீ ஸாடி தெய்வமு" என்ற இடத்தில் கையாண்ட நிரவலும் கற்பனை ஸ்வரமும் ரஞ்சகமாயிருந்தன. கேதார கௌளை ராக (வேணுகான லோலுனி) ஆலாபனை சுருக்கமாயும் சுகமாயுமிருந்தது. அன்றைய பிரதான ராகமான சங்கராபரணத்தை மூன்று ஸ்தாயிகளிலும் படிப்படியாக விரிவுபடுத்தி நன்கு சித்தரித்தார். இதில் முத்தையா பாகவதரின் "ஸஹஜகுண ராம" கிருதியை வழங்கி "மஹநீயரகுவம்ச சிகாமணி" என்ற இடத்தில் நிறைவுடன் செய்த நிரவல் ஸ்வரப்ரஸ்தாரமும், பஞ்சம நியாயமும் குறைப்பும் பாங்காயிருந்தன.

பக்கவாத்யம் வாசித்த சிவராமனும் மாலியும் அநுசரணையாக வாசித்தனர். பூஷணி தனி ஆவர்த்தனத்திற்கு சற்றுமுன்னதாகவே சந்தர்ப்பம் அளித்திருக்கலாம். எனினும் மாலியின் ஆதிதாளம் இரண்டுகளை அரையிடத்திற்கான சுருக்கமான 'தனி' சுகமாகவே இருந்தது.

நன்றி: **தினமணி**

---

### மாலியும் எருமையும்

மறைந்த புல்லாங்குழல் மேதை டி. ஆர். மகாலிங்கமும் அவரது நண்பரும் ஒருநாள் சென்னையில் ஒரு வீதிவழியே நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது ஒரு எருமை அவர்களை நோக்கிப் பாய்ந்து கொண்டு வந்தது. அவர்கள் எப்படியோ அதனிடமிருந்து தப்பித்துக் கொண்டனர். ஆனால் மாலியோ அந்த எருமையைக் கண்வெட்டாது பார்த்துக் கொண்டே நின்றார். "என்ன, ஒரேயடியாக எருமையைப் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்களே?" என்று நண்பர் வினவினார். "இல்லை, அது திஸ்ர நடையிலே துள்ளிக் கொண்டு போகிறது, பார்த்தீங்களா?" என்றார் மாலி.

---

ராக லட்சணம்

# சங்கராபரணம்

"இறைவன் சூடும் எழிலணியாமென்று
அறையப்படுவது சங்கராபரணம்"

என்று ராகலட்சண சூத்திரத்தில் கூறப்படுவதிலிருந்து இதனுடைய பெருமையை நன்கு அறியலாம். 29வது மேளகர்த்தாவாகிய சங்கராபரணம் ஐந்தாவது சக்கரத்தில் ஐந்தாவது ராகமாகும் (பாண — மா). ஸட்ஜ பஞ்சமத்தைத் தவிர இதில் வரும் ஸ்வரங்கள் சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்தமத்திமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம் ஆகும். கடபயாதி சங்கியைக்காகத் தீரசங்கராபரணம் எனவும் அழைக்கப்படுகிறது. இதனுடைய சங்கேதாட்சரம் ரி கு ம தி நு ஆகும். சர்வ ஸ்வர கமக வரிகரக்திராகம். அதாவது ஆரோகண அவரோகணத்தில் வரும் எல்லா ஸ்வரங்களும் கமகத்துடன் நன்கு அசைத்துப் பாடக் கூடிய ராகமாகும். ஸஸ ரிரி கக மம போன்ற ஜண்டைஸ்வரப்பிரயோகங்களும் ரிநிஸதநிபதமபகமரிகஸ போன்ற தாட்டு ஸ்வரப்பிரயோகங்களும் ராகரஞ்சகமானவை. ஸ் நி ப என்பது ஓர் அபூர்வமான விசேஷ சஞ்சாரமாகும். இவ்ராகத்தில் வரும் எல்லா ஸ்வரங்களும் ஜீவஸ்வரங்களாகும். க, ப, த நியாச ஸ்வரங்கள். க, ப நிலே ஸ்வரங்கள். ரிஷப காந்தார [ஸ்வரங்கள் சிறிது ஊன்றிப் பாடவேண்டும்.

விஸ்தாரமான ஆலாபனேக்கு இடங்கொடுக்கும் ராகம். இதை எந்நேரமும் பாடலாம். எனினும் மாலே வேளேகளிற் பாடமிக இனிமையாக இருக்கும். உருப்படிகள் பெரும்பாலும் ஸட்ஜ ரிஷப மத்திம பஞ்சம ஸ்வரங்களிலேயே ஆரம்பிக்கின்றன. ரிஷப தைவத ஸ்வரங்கள் தீர்க்கமாகவும் கம்பிதமாகவும் தோன்றுகின்றன. ஸ நி த ப என்னும் மந்த்ரஸ்தாயிப் பிரயோகம் சௌக்க காலத்திற் பொருந்தாது. நவரோஜ் ராகத்தின் களே அடிக்கும் என்பதாலேயே இந்தப் பிரயோகம் விலக்கப்பட்டுள்ளது. இவ்ராகத்தினுடைய ரி,க,ம,ப,த ஆகியஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் ஆதார ஸட்ஜங்களாக வைத்துக் கொண்டு இதன் ஸ்வரங்களேயே தொடர்ந்து கிரகம் செய்தால் முறையே கரகரப்ரியா, தோடி, கல்யாணி, ஹரிகாம்போதி, நடபைரவி ஆகிய ராகங்கள் தோன்றும்.

சுலோகங்களும் விருத்தங்களும் பாடுவதற்கு ஏற்ற ராகம். எனினும் அகவல் பாடுவதற்கு இவ் ராகமே மிகச்சிறந்தது. பண் பழம் பஞ்சுரம் என்பதும் இதுவேயாகும். பெரும்பாலான ஸ்வரக்கோர்வைகள்

## சங்கராபரணத்திலுள்ள உருப்படிகள்

### தியாகராஜர்:

சுந்தரேஸ்வரனி, ஸ்வரராகசுதா,
ஈவரகுஜூசின, எதுடநிலசிதே,
எந்துகீசலமு, எந்துகுபெத்தல,
ஏமிநேரமு, ஏவிதமுலநைந
கதமோஹா, நநுப்ரோவகநு,
நாபாலிஸ்ரீ, பரிபாலயதாசரதே,
பாஹிராமசந்த்ர, புத்திராது,
பக்தி பிச்ச, மனஸூஸ்வாதீன,
மரியாதகாதுர, ரமாரமணராரா,
ராமநிநுவிநா, ராமஸ்ரீராம,
ராமசீதாராம, வரலீயகான,
வல்லகாதநக, விஷ்ணுவாகனு,
சம்போசிவ, ஸ்ரீரகுவர,
ஸாரஸநேத்ர, ஸீதாகல்யாண,
ஸீதாபதிகாவ,

### சியாமா சாஸ்திரி :

ஸரோஜதளநேத்ரி, தேவிமீன நேத்ரி
* நநுகருணிஞ்சி

* நநு கருணிஞ்சி என்னும் கிருதி சியாமா சாஸ்திரிகளுடைய தெனக்கிருதிமணி மாலேயிலுள்ளபோதும் அதில் அவருடைய முத்திரை இல்லாததால் அபிப்பிராய பேதமுள்ளது.

(English notes) சங்கராபரணத்திலிருப்பது குறிப்பிடத் தக்கது. மேலும் வடதேசத்து இசையில் காணப்படும் 'பிலாவல்' என்பதும் மேல் நாட்டுச் சங்கீதத்தில் உள்ள மேஜர் ஸ்கேல் (Major Scale) எனப்படுவதும் சங்கராபரணமேயாகும்.

மிகவும் பிரபல்யமான கல்யாணி ராகத்தின் எதிர் மேளமாகிய இவ்ராகத்தை முன்னர் ஜன்ய ராகமென்றும் இதன் அவரோகணம் ஸ்தா ப ம க ரி ஸ என்றும் ஓர் அபிப்பிராயமிருந்தது. எனினும் ஸநிதப என்னும் பிரயோகமே பெரும்பாலும் வருகின்றதால் அவரோகணத்தை சம்பூர்ணமாகவே கொள்ளவேண்டும். சங்கீத ரத்னாகரம், சங்கீத மகரந்தம், சங்கீத சமயசாரம் போன்ற புராதன நூல்களில் இவ்ராகத்தின் பெயர் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அடாணு, ஆரபி, கன்னட, கருடத்வனி, கதனகுதூகலம், குறிஞ்சி, கேதாரம். கௌடமள்ஹார், ஜனரஞ்சனி, தேவகாந்தாரி, நவரோஜ், நீலாம்பரி, பிலஹரி, பூர்ணச்சந்திரிகா, பெஹாக், பேகட, விவர்த்தனி, சாமா, சுத்தசாவேரி, ஹம்சத்வனி ஆகிய பிரபலமான ராகங்கள் சங்கராபரணத்திலேயே ஜன்யமானவை.

தஞ்சை ஆஸ்தான வித்வானாகிய நரசையர் என்பவர் இவ்ராகத்தை மிக ரஞ்சகமாகப் பாடுவதில் வல்லமை வாய்ந்தவரென்பதால் இவரை சங்கராபரணம் நரசையர் என்றழைத்தனர். ஒருமுறை பணம் தேவைப் பட்டபோது சங்கராபரணத்தை அடைவு வைத்துப் பணத்தைப் பெற்றார். அதன் பின் இவர் இவ்ராகத்தைப் பாடுவதை நிறுத்தி விட்டார். ஒருமுறை இவரது கச்சேரியை ஒழுங்குபடுத்திய ஒரு தனவந்தர் இவரிடம் சங்கராபரணம் பாடும்படி கேட்டார். அப்போது இவர் தான் அந்த ராகத்தை அடைவு வைத்து விட்டதால் அதனைப்பாட முடியாதென்று கூறினார். தனவந்தர் ஆச்சரியப்பட்டுத் தானே அந்த அடைவை மீட்டு இந்த ராகத்தைப் பாடவைத்தார்.

தயாபரி செந்தில்நாதன்

தீக்ஷிதர் :

அக்ஷயலிங்கவிபோ, குருமூர்த்தே, நாகலிங்கம், ஸ்ரீதக்ஷிணாமூர்த்தே, ஸதாசிவம், சுந்தரேஸ்வராய, ஸ்ரீகமலாம்பிகாய

ஸ்வாதித் திருநாள்

சலமேல (வர்ணம்), தேவிஜகஜ்ஜனனி
மனவிஸேகொன, நிருத்யதி (பதவர்ணம்)

வீணைகுப்பையர்:

ஸாமிநிந்நே (வர்ணம்), பாகுமீரகனு

ஏனைய கீர்த்தனங்கள்

முத்துக்குமரையனே (ராமஸ்வாமி சிவன்)
தூக்கியதிருவடி (சுத்தானந்த பாரதி)
யாரோஎன்றெண்ணாமலே (அருணாசலக்கவிராயர்)
ஸாமிகி ஸரி (பதவர்ணம்-குன்றக்குடி கிருஷ்ணையர்)
சரணாகதியென்று (கோபாலகிருஷ்ணபாரதி)
சங்கராச்சார்யம் (சுப்பராம தீக்ஷிதர்)
நல்ல நல்ல நிலவு (பதம்-கனம் கிருஷ்ணையர்)
மகிம தெலிய (ஆனையா)

---

ராமு: என்ன ராகம் பாடுகிறார், ஸார்?

சீனு: கல்யாணி

(சிறிது நேரஞ் செல்ல)
ராமு: இது என்ன தாளம் சார்?

சீனு: ஆதி



ராமு: (தனக்குச் சங்கீதம் தெரியாதென்று சீனு நினைத்து விடுவாரோ என்று எண்ணிக் கொண்டு) ஆமா ஸார், கல்யாணி ராகம் என்றால் ஆதி தாளம் தானே!

அண்மையில் மறைந்த கலைஞர்கள்:

# சங்கீத கலாநிதி டாக்டர் எஸ். இராமநாதன்

சங்கீத உலகம் திரு. இராமநாதன் அவர்களின் மறைவினால் பேரிழப்பிற்குள்ளாகியிருக்கிறது.

ஒரு சிறப்புள்ள வீணைக் கலைஞர், மாபெரும் ஆராய்ச்சியாளர், திறன் மிக்க இசை ஆசிரியர், புலமை மிக்க பேச்சாளர், அறிவாற்றல் நிறைந்த இசைப்பேராசிரியர், சங்கீத ஞானமும் சங்கீதசாஸ்திர ஞானமும் கொண்ட கலைஞர், இனிமையாகப்பாடும் காயகர், அரிய இசை நூல்களை வெளியிட்டவர், உலக அரங்கிலும் வெளிநாடுகளிலும் எம் இசையின் சிறப்பினைப் பறைசாற்றச் சென்ற தகுதிமிக்க தூதுவர், இந்தியப் பண்பாட்டில் ஊறியவர், தமிழிசைக்கு அளப்பெரிய தொண்டாற்றியவர் மறைந்தால் அது பேரிழப்பே அல்லவா? கலைமகளே கண்ணீர் சிந்துகிருள்!

அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்று இசை உலகுக்கு 45 ஆண்டுகளுக்குள் அறிமுகமான இவருடைய வீணைக் கச்சேரிகளையும் வாய்ப்பாட்டுக் கச்சேரிகளையும் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். ரி.பி. சபேசையர், கே. பொன்னையாபிள்ளை டைகர் வரதாச்சாரியார் ஆகியோரால் அத்திவாரம் இடப்பட்டு வளர்ந்தவர் திரு. இராமநாதன்.

பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்களைப்போல் இசைத்தொண்டு புரிந்தவர். அவருக்குப் பின் அந்த இடத்தை நிறைவு செய்யும் தகுதி பெற்றவர் இவர் ஒருவரே எனத்துணிந்து கூறலாம்.

"கலைமகள் இசைக்கல்லூரி" யைச் சென்னையில் நிறுவி அதில் திறமையான முறையில் ஏராளமாணவர்களுக்கு வீணையும் வாய்ப்பாட்டும் போதித்துப் பலரைக் கலைஞர்கள் ஆக்கியுள்ளார்.

மதுரையில் சத்குரு சங்கீத சமாஜத்தில் முதல்வராக அமர்ந்து முதுநகரில் இவர் செய்த இசைத்தொண்டு விவரிக்கமுடியாதது. திருவனந்தபுரம், சென்னை, திருச்சி, மைசூர் ஆகிய வானொலி நிலையங்களில் இவரது இசைநிகழ்ச்சிகள், இசைநாடகங்கள் மற்றும் சிலப்பதிகாரம் போன்ற இசைச் சித்திரங்கள் முதலியன ஒலிபரப்பப்பட்டுப் பாராட்டுக்களைப் பெற்றன.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குரிய குழுக்களில் இசைபற்றிய கட்டுரைகளுக்குப் பொறுப்பாக இவர் தெரிவு செய்யப்பட்டுக் கடமையாற்றினர்.

1964 இல் அமெரிக்காவில் கர்நாடக இசை போதிக்க வெஸ்லியன் பல்கலைக்கழகம் சென்றுர் சுமார் $1\frac{1}{2}$ ஆண்டுகட்குமேலாக அங்கே தங்கி பல்வேறு பல்கலைகழகங்களுக்கும் சென்று, கோடைவகுப்புக்கள் நடத்தியும் விரிவுரைகள் நிகழ்த்தியும் கருத்தரங்குகளில் பங்குபற்றி கச்சேரிகள் செய்யும் வாய்ப்பையும் பெற்றுர். சுமார் 10000 சிறுவர் சிறுமியர் முன்னிலையில் நியூயார்க் நகரத்தின் ஃபில்ஹார்மோனிக் மண்டபத்தில் இவர் வீணைக்கச்சேரி செய்து அவர்களை மகிழ்வித்ததை எப்பொழுதும் நினைத்துப் பெருமைப்படுவார் திரு. இராமநாதன்.

இவரது இசை நூல்வெளியீடுகள் மிகப் பிரசித்தமானவை. சங்கீத சம்பிரதாயப் பிரதர்சினி (4 பாகங்கள்) வித்வத்சபை வெளியீடாகத் திரு. B. இராஜமையருடன் இணைந்து தயாரிக்கப்பட்டு வெளியாகியது.

"சிலப்பதிகார இசை நுணுக்க விளக்கம்' என்னும் நூல் இவருக்கு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுத்தந்தது.

திவ்வியப் பிரபந்தப்பண் இசை, நந்தனர் சரித்திரக்கீர்த்தனை, சியாமா சாஸ்திரிகள் அரிய உருப்படிகள் தியாகராஜரின் திவ்வியநாமக்கீர்த்தனை. (இருபாகங்கள்)

தியாகராஜ உற்சவசம்பிரதாய கீர்த்தனை, தியாகராஜ பிரகலாத பக்திவிஜயம்(தமிழில்) அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து, ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் என்பன இதரவெளியீடுகளாகும்.

தியாகராஜரின் அரிய உருப்படிகளான நீ பதபங்கஜ தொருகுனு இடுவண்டி கொலுவையுன்னுடே.'' இவைகளை மிகவும் ரஞ்சகமாகப் பாடும்போது பழம்பெரும் வித்வான்களின் நினைவு எங்களுக்கு ஏற் படும்.

எளிமையும், படாடோபம் அற்றதும் அன்புகனிந்த பேச்சும் அவையடக்கமும் முதிய, இளைய கலைஞர்களுக்கு இவர் கொடுக் கும் கௌரவமும் யாவரும் ஆச்சரியப்படும் படி இருக்கும்.

ஒருவாத்தியத்தில்திறமைமிக்க ஒருகலைஞன் வாய்ப் பாட்டிலும் உன்னத ஸ்தானத்தை அடையமுடியும் என்பதை நிருபித்துக்காட் டியவர்களில் திரு இராமநாதனும் ஒருவர்.

இராமநாதனது ஆன்மா சாந்திஅடை வதாக. அவரது குடும்பத்தினருக்கு எனது அநுதாபங்கள்.

**S. N. நடராஜஐயர்**

19-3-88 ல் தனது 71 வது வயதில் காலமான பேராசிரியர் இராமநாதன் அவர்கள் கர்நாடக இசைத்துறை நிபுணர் கள் வரிசையில் பிரகாசித்த மேதையாவார்' இப் பெரியாரைப் பற்றி எழுதுவதானால் எமது மாணவப்பருவத்தையும் சற்று நினைவு கூருவது அவசியமாகிறது. 1966 ம் ஆண் டில் சென்னை கர்நாடக இசைக் கல்லூரி யில் மாணவனகச் சேர்ந்தேன். எமது முத லாவது அறிமுறை வகுப்பில் விரிவுரையா ளர் வரும் வரை மாணவ மாணவியரின் இரைச்சலோடு அமர்ந்தேன். சாதாரண மாக இசை மாணவர்களுக்கு தியறி வகுப் பென்பது அதிக ஆர்வத்தைக் கொடுக்காத ஒன்று. இந் நிலையில்தான் நானுமிருந்தேன் சுமார் 48 வயது மதிக்கத் தக்க ஒருவர் வகுப்பறையினுள் நுழைந்தார். அவரது அமைதியும் புன்சிரிப்பும் முகத்தின் தேஜ ஸும் மாணவராகிய எம்மை அடக்கத்தி விருத்தியது. மிக மென்மையான குரலில் விரிவுரையை ஆரம்பித்தார். என்ன தெளிவு விளக்கம் செயன் முறையோடு கூடிய சாஸ்திர அறிவு மாணவர்களுக்குப் புரியும் படி இலகு நடையுடன் கற்பித்த முறை. இவற்றால் மாணவர்களாகிய எம்மை நன்கு கவர்ந்தார் என்பதை வகுப்பின் முடிவில் அனைத்து மாணவர்களும் ஒன்று கூடி உரை யாடிய போது அறிய முடிந்தது.

அந்த வகுப்பின் பின்பு அவரைப் பற் றிய முழுவிபரங்களையும் அறிய ஆரம்பித் தேன். "சங்கீத பூஷணம்'' பட்டம் பெற்ற திரு. S. இராமநாதன் அவர்கள் வாய்ப் பாட்டிலும் வீணையிலும் சிறப்புப் பெற்று வாக்கெயகாரர், மேடைக்கலைஞராகவும் விளங் கினார். சாதாரணமாக செயன் முறைக் கலை ஞர்கள்,வித்வான்கள் அறிமுறையில் பிரகாசிப் பதில்லை. அறிமுறை ஆராய்ச்சியில் ஈடுபடு பவர்கள் மேடைக் கலைஞர்களாக பிரகாசிப்பது குறைவு ஆனல் இராமநாதன் அவர்கள் இரு பிரிவுகளிலும் சிறந்து விளங்கியவர். இவர் சென்னை கர்நாடக இசைக் கல்லூரியின் அறிமுறைப் பொறுப்பாளராகவும் இருந் தார் அமெரிக்க வெஸ்லியன் பல்கலைக்கழ கத்தில் சிலப்பதிகாரத்தில் இசை நுணுக் கம் என்ற தலைப்பில் ஆய்வு செய்து டாக் டர் பட்டத்தைப் பெற்றார் தொடர்ந்து கர்நாடக இசைக் கல்லூரியின் இசை ஆல ரிய பயிற்சி டிப்ளோமா பேராசிரியராக அமர்த்தப்பட்டார். அந்தக் கற்கை நெறி யில் நானும் மாணவனாக அமர்ந்து பசி வித இசை நுணுக்கங்களையும் அறிந்தமை நாம் பெற்ற பேறு என்று தான் கூற வேண்டும். தமிழகத்திலுள்ள இசை முக்கி யத்துவம் வாய்ந்த இடங்களுக்கு மாணவர் களாயகி எம்மை அழைத்துச் சென்று ஒவ் வொரு விஷயமாக அவர் விளக்கிய தன் மையும் மாணவர்களோடு எளிய முறையின் பழகிய விதமும் இன்றும் மறக்க முடி யாதிருக்கின்றது.

சென்னையிலுள்ள சபாக்களில் பேராசிரியரது இசைக் கச்சேரிகள் நடக்கும் போது தவறாது ரசிகர்களுள் ஒருவனாக நானுமிருப்பேன். அவரது பாடற்பட்டியல்கள் ஏனைய வித்துவான்களது பாணியிலிருந்து மாறுபட்டிருக்கும் அபூர்வக் கிருதிகள் அபூர்வ ராகங்கள், சியாமா சாஸ்திரி கிருதிகள் உற்சவம்பிரதாயக் கீர்த்தனைகள், தமிழிசைப் பாடல்கள் இப்படியாகப் பல வகையாக அமைந்திருக்கும்.

கச்சேரிகள் செய்வதோடு கருத்தரங்குகள் இசை மாநாடுகள் போன்றவற்றில் தலைமை தாங்குவது ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பது போன்ற பல பிரிவுகளிலும் தமது பங்கை சிறப்பாக ஆற்றியுள்ளார்.

தெலுங்கு சமஸ்கிருத கன்னடக் கீர்த்தனைகளில் எவ்வளவு புலமை இருந்ததோ அதே போல் தமிழிசையிலும் பண் ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்கினார். இதை விட சங்கீத சாஸ்திர நூல்கள் பலவற்றையும் வெளியிட்டு சாஸ்திரப் பிரிவிலும் தனது திறமையை நிரூபித்துள்ளார். கர்நாடக இசைத்துறையின் பல பிரிவுகளிலும் நிபுணத்துவத்தால் அனைவரும் இராமநாதன் அவர்களது வித்துவத்தன்மைக்கும் புலமைக்கும் மதிப்புக் கொடுத்தனர்.

சென்னை சங்கீத வித்வத் சபையின் சங்கீத கலாநிதி, தமிழிசைச் சங்க இசைப் பேரறிஞர் மற்றும் சங்கீத கலாப்ரவீணா போன்ற பட்டங்களைப் பெற்றார். மதுரை சத்குரு சங்கீத வித்யாலயத்திலும் பணியாற்றினார். சென்னை வானொலி, மூலம் பல இசைச்சித்திரங்களையும் தயாரித்துள்ளார். மேல் நாட்டிசை யப்பானிய இசை இவற்றின் நுட்பங்களையும் தெரிந்து வைத்துள்ளார்.

சமீப காலங்களில் வெண்தாடியுடன் ஒரு இசை முனிவராகவே வாழ்ந்து கர்நாடக இசைக்கே தன்னை அர்ப்பணித்துள்ளார். இவரது மகள் ஒருவர் சிறந்த வீணைக் கலைஞர் அமெரிக்கர் ஒருவரை மணம் புரிந்த செல்வி கீதா அவர்கள் நல்ல சிறுகதை எழுத்தாளருமாவார். கீதா பெனட் என்று குமுதத்தில் சிறுகதைகளை எழுதியுள்ளார்.

இவ்வாறு பல சிறப்புகள் பெற்ற பேராசிரியர் இராமநாதன் அவர்களது மறைவு கர்நாடக இசைக்கு ஒரு பேரிழப்பாகும்.

A. K கருணாகரன்

## ராஜீவும் வயலினும்

இந்திய ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் ஒரு மியூசிக் ஹால் இருக்கிறது. கடந்த ஆகஸ்ட் 19ம் திகதி ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் அங்கு டி. என். கிருஷ்ணனின் வயலின் கச்சேரி நடைபெற ஒழுங்கு செய்திருந்தார். அதற்கு பிரதமர் ராஜீவும் மனைவி சோனியாவும் வந்திருந்தனர். சுமார் 100 பேர் வரை அங்கிருந்தனர். பிரதமர் கிருஷ்ணனின் வயலினிசையை நன்றாக ரசித்துக் கேட்டார். சில சமயங்களில் கை கூடத் தட்டினார். இரண்டு மணிநேரம் போபர்ஸ் போன்ற பிரச்சனைகளை மறந்து நிம்மதியாக இருந்தார்.

ஜனாதிபதி வயலின் இசையை ரசித்தது மட்டுமின்றி கூடவே ராகத்தையும் பாடினார். ஆர். வி. ஜனாதிபதியாக இருக்கும் வரை அந்த மாளிகையில் அடிக்கடி கர்னாடக சங்கீதம் ஒலிக்குமென எதிர்பார்க்கலாம்.

— நன்றி: தினமணி.

## ஈமனி சங்கரசாஸ்திரி

கர்நாடக இசையுலகில் வித்வான்களின் ஊருக்குப் பெருமை. ஆந்திர தேசத்தில் வீட்டுக்குப் பெருமை. இதன்படி ஈமனி என்பது அந்த வம்சத்தையே குறிக்கும் சொல்லாகிறது. இந்த வம்சம் இசைக்கலைக்குப் பெருமை கொடுத்ததாகிறது. ஈமனி அச்சுதராம சாஸ்திரி என்பவர்தான் தன்வம்சத்திற்கு அப்பெருமையை அளித்த உத்தம வைணிகர். புகழும் ஆற்றலும் மிக்க இவரின் புதல்வர்தான் அண்மையில் இசையுலகை மாபெருந் துயரில் ஆழ்த்தி விட்டு நாதப் பிரமத்தில் ஒன்றிய ஸ்ரீ சங்கரசாஸ்திரிகள்.

வடமொழி, தெலுங்கு இவற்றில் பாண்டித்தியம், தந்தையிடம் முறையாகவும் கட்டுப் பாடாகவும் பயின்ற வீணை இசை அனைத்திற்கும் அநுசரணையாக முழுமையாக இசையில் ஈடுபட்ட அவரது மனம் இவைகளே இம் மாமேதையின் திறனுக்கும், பெருமைக்கும் புகழுக்கும் காரணமானவை.

சிறந்த முறையில் திரு. சிட்டிபாபு போன்ற கலைஞர்களை உருவாக்கியதோடன்றி வாத்தியக் கோஷ்டி இசைக்கு இவர் செய்துள்ள பணிமகத்தானது.

பழம் இசை நூல்களில் கூறியுள்ள பல்வேறு கமக வகைகளையும், மீட்டு வகைகளையும் ஆராய்ந்து உண்மையுணர்ந்து கைக்கொண்ட கலைஞர்களில் இவருக்குச் சிறப்பிடம் உண்டு. வீணைக்கருவி இவரது சொற்படியெல்லாம் செயற்படும் அளவுக்கு அக்கருவியில் இவர் சாதகம் செய்துள்ளார். ''நெளி'' எனப்படும் கம்பிகளை அணிந்து கொள்ளாமல் நேரடியாக விரல்களாலும் நகங்களாலுமே இயற்கையாக மீட்டி மிருதுவானதும், தொடர்ச்சியானதுமான நாதத்தை உண்டாக்குவதில் கைதேர்ந்தவர்.

இந்துஸ்தானி இசையிலும் ஈடுபாடும் புலமையும் உடையவர். சில சமயங்களில் ஸித்தார் மீட்டுக்களையும் கைக்கொள்வார். அகில இந்தியவானொலியில் ''தேசிய வாத்தியக் கோஷ்டி''யின் இயக்குநராகப் பணியாற்றிய போது, இசையில் பல புதிய உத்திகளைக் கையாண்டு வாத்திய உருப்படிகளை உருவாக்கி வழங்கினர். அபூர்வதாளங்கள், அபூர்வராகங்கள் இவற்றைக் பொருத்தமாக வாத்தியக் கோஷ்டி இசைக்குப் பயன்படுத்த முடியும் என்று எடுத்துக்காட்டினர்.

வாய்ப்பாட்டு, தனிவாத்தியக்கச்சேரிகள் போன்று, வாத்தியக் கோஷ்டி இசைக் கச்சேரியும் மிகுதியாக நடைபெற்றால் மக்களின் இசைஞானம், ஆர்வம், வளரப் பெரிதும் உதவும் என்பது இவரது கருத்து. உயர்ந்த வித்தையையுடைய இவர் விநயமாக நடந்து இசையுலகில் பெருமைபெற்றார் என்றால் இசைக்கலைஞர்களாகிய நாமும் அவர்வழியைப் பின்பற்றினல் அதுவே அவருக்குச் செய்யும்அஞ்சலியாகும்.

S. N. நடராஜ ஐயர்

## கலைப்புதிர் விடைகள்

(வினக்கள் 14ம் பக்கம்)

1. மோகனம், பூபாளம், பிலஹரி, பௌளி சிவரஞ்சனி, ரேவகுப்தி,
2. ஸ்ரீரஞ்சனி, நாட்டைக்குறிஞ்சி கன்னடகௌளை காபிநாரயணி, வசந்தபைரவி, சரஸ்வதிமனோகரி
3. மைசூர் வாசுதேவாச்சார்
   பாபநாசம் சிவன்
   ஊத்துக்காடு வேங்கட சுப்பையர்
   மாயூரம் விஸ்வநாத சாஸ்திரி
   திருவொற்றியூர் தியாகையர்
4. பல்லடம் சஞ்சீவராவ் புல்லாங்குழல்
   திருவெண்காடு சுப்பிரமணியபிள்ளை நாதஸ்வரம்
   பாலக்காடு மணிஐயர் மிருதங்கம்
   கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின்
   குற்றாலம் விசுவநாத ஐயர் கடம்
   அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் பாட்டு
5. i) சலமேலரா, மார்க்க ஹிந்தோளம்
   ii) ஹிமகிரிதனயே, சுத்த தன்யாசி
   iii) அள்ளி உண்டிடலாம், பந்துவராளி

## சீர்காழி எஸ். கோவிந்தராஜன்

''சீர்காழி'' என்ற சொல்லைக் கேட்டதுமே திரு. S. கோவிந்தராஜனின் நினைவு தான் எமக்கு வரும். அநேகருக்கு சீர்காழி அவர்களின் இயற்பெயரைவிட ஊர்ப்பெயர் தான் மிகப்பிரசித்தம். தமிழகத்தின் சிற்றூராகிய சீர்காழியைச் சேர்ந்த திரு S. கோவிந்தராஜன் அவர்கள் உலகெங்குமிருக்கும் தமிழர்கள் மத்தியில் தனது இனிமையான குரல்வளத்தாலும், பக்திச் சுவையாலும் மிகப்பிரபலமானவர். சினிமாப்பாடல்கள் மூலம் பிரபலமான அவர் கர்நாடக இசையை பாமரஜனங்கள் மத்தியில் பரப்பியவர் என்றாலும் மிகையாகாது.

சென்னை கர்நாடக இசைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதல் தொகுதி மாணவர்களுள் ஒருவராகப் பயின்ற சீர்காழி அவர்கள் 1949ம் ஆண்டளவில் ''சங்கீத வித்வான்'' பட்டம் பெற்றார்.

குருகுல வாச முறையில் சங்கீத கலாநிதி திருப்பாம்பரம் N. சுவாமிநாத பிள்ளை அவர்களிடம் சிஷ்யனாக அமர்ந்து பல வருடங்கள் விசேஷ பயிற்சி பெற்றார். தமிழிசைமன்றத்திலும் ''இசைமணி'' பட்டத்தைப் பெற்றார்.

தமிழ் உச்சரிப்பு, தாரஸ்தாயி பிரயோகங்கள், பக்தி, மற்றும் அர்த்தபாவத்துடன் பாடுவது போன்ற சிறப்புக்களால் தமிழிசைக்கே தன்னை அர்ப்பணித்தார். அவர் ஒலித்தட்டில் பாடியுள்ள இசைக்கச்சேரிகள், பக்திப் பாடல்கள், கர்நாடக இசையின் அடிப்படையில் அமைந்த சினிமா மெல்லிசைப் பாடல்கள் உலகெங்குமிருக்கும் தமிழர் விழாக்கள், ஆலய உற்சவங்கள் போன்றவற்றில் ஒலிப்பதைக் கேட்கலாம்.

தமிழிசைக்கும், பக்தி இசைக்கும் இவர் செய்த சேவையினைக் கணித்து சென்னைப் பல்கலைக் கழகம் கௌரவ ''டாக்டர்'' பட்டத்தினை இவருக்கு அளித்துச் சிறப்பித்துள்ளது.

சென்னை தமிழிசைச் சங்கத்தின் 'இசைப் பேரறிஞர்'' விருதுடன், மத்திய அரசாங்கத்தின் ''பத்மஸ்ரீ'' விருதினையும் சிறப்புப்பட்டங்களாகப் பெற்றுக் கொண்டார்.

எமது ஈழ நாட்டிற்கு அநேகதடவை வந்து ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் கச்சேரி செய்து ஜனரஞ்சக ரீதியில் கேட்கும் இசை அறிவு வளர உதவியுள்ளார். ஈழம் தவிர மலேசியா, சிங்கப்பூர் அமெரிக்கா லண்டன், மொரீஷியஸ், இந்தோனேசியா போன்ற பல நாடுகளுக்கும் சென்று தமிழ் இசையை ஒலிக்கச் செய்தார்.

நடிப்புத் துறையிலும் புகுந்து ஏறக்குறைய 13 படங்களில் பாடி நடித்துள்ளார், சிறப்பாக ''அகத்தியர்'' படத்தைக் குறிப்பிடலாம்.

கடந்த 3 வருடங்களாக அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய சீர்காழி அவர்கள் 24-3-88ல் மாரடைப்பால் காலமானது குறிப்பாகத் தமிழிசைக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறைக்கும் ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பாகும்.

ரசிகப்பிரியா

---

## விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை

எமது நாட்டில் இசை, நடனம் ஆகிய இருதுறைகளிலும் சிறப்புப் பெற்றுக் கலைஞர்களாக மிளிர்ந்தவர்கள் மிகக்குறைவே. ஆனால் 1987 பெப்ரவரியில் காலமான திருமதி விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை அவர்கள் இசை, நடனத்துறைகளில் பல வருடங்கள் சேவை செய்து புகழீட்டியவர். சென்னை கர்நாடக இசைக்கல்லூரியின் சங்கீதவித்துவான் பட்டத்தினைப் பெற்ற விஜயலட்சுமி அவர்கள் நாட்டியத்திலும் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்று யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி இரண்டிலும் இசை ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்பு கொழும்பில் பல வருடங்கள் பணியாற்றி அங்கேயே நிரந்தரமாக வசித்தார். இலங்கை வானொலியில் ஏ பிரிவுக்கலைஞராகப் பல வருடங்கள் பாடியுள்ளார். உருப்படிகளைப் பாடுவதிலும் இராகஆலாபனைகளைக் கச்சிதமாகப் பாடுவதிலும் சிறந்து விளங்கினார்.

கொழும்பில் நாட்டிய வகுப்புக்களை நடாத்திப் பல நாட்டிய நாடகங்களைத் தயாரித்தும் பலரை அரங்கேற்றி நட்டு வாங்கம் செய்தும் சிறந்துள்ளார்.

''மீனாக்ஷி கல்யாணம்'' என்ற நாட்ய நாடகம் இவருக்கு நற்பெயரை ஈட்டிக் கொடுத்தது.

விஜயலக்ஷ்மி அவர்களது குடும்பமே கலைக்குடும்பம். கணவர் திரு. K. ஷண்முகம்பிள்ளை அவர்கள் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பிரபல மிருதங்கவித்துவான். மகள் வாசுகி அவர்கள் பிரபல நாட்டியக் கலைஞர். மகன் விஸ்வநாதன் அவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சித்தயாரிப்பாளரும், அறிவிப்பாளரும் ஆவர். இவ்வாறான ஒரு கலைக்குடும்பத்தின் தலைவியாகிய விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை அவர்களின் மறைவு அக்குடும்பத்திற்கும் இசை, நடனத்துறைகளுக்கும் பேரிழப்பாகும்.

ரசிகப்பிரியா

---

## விஜயா

காலஞ் சென்ற பிரபல சங்கீத மேதையான செம்பை வைத்திய நாத பாகவதரின் சிஷ்யர்களில் கேரளத்தைச் சேர்ந்த ஜெயா, விஜயா ஆகியோர் இருவராவர். இவர்கள் இரட்டையர்கள், ஒன்றாகச் சேர்ந்து செம்பையின் பாணியிலேயே மிகவும் சிறப்பாகக் கச்சேரிகள் செய்து வந்தனர். சில ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு வந்திருந்தபோது யாழ். நுண்கலை மன்றத்திற் கச்சேரி செய்து யாழ் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தனர்.

இவர்களில் ஒருவரான விஜயா அண்மையில் இந்தியாவில் காலமானாரென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## என். ஆர். கோவிந்தசாமி

தமிழ் நாட்டிலே ராசமன்னார் குடியின் திருமக்கோட்டையில் பிறந்த நடேசு இரத்தினம் என்பவர் தனது சிறுபராயத்திலேயே யாழ்ப்பாணத்துக்கு வந்து இணுவிலிலே வாழ்ந்து வந்தார். அவரது புத்திரனாகிய என். ஆர். கோவிந்தசாமி 18-9-1927 ல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்டு இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிலிருந்த தர்மபுரம் ஆதீன வித்துவான் அபிராம சுந்தரம்பிள்ளையிடம் குருகுலவாச முறையில் நாதஸ்வரம் பயின்ற கோவிந்தசாமி பிற்காலத்தில் ஒரு தலைசிறந்த நாதஸ்வர வித்துவானாகத் திகழ்ந்தார். இவர் இந்தியாவிலும் கச்சேரிகள் செய்து பாராட்டுகளைப் பெற்றார்.

இவர் தனது அறுபதாவது வயதில் 23. 2. 1988ல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் பிரபல தவில் வித்துவான் என். ஆர். சின்னராசா அவர்களின் சகோதரராவர்.

---

## என. சண்முகலிங்கம்

லிங்கம் சகோதரர்கள் என்ற இருவர் 25 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இசை விழாக்களில் மிகவும் பிரமாதமாக பாடி ரசிகர்களை நன்றாகக் கவர்ந்தனர். என். சண்முகலிங்ககம், என். கனகலிங்கம் என்பவர்களில் மூத்தவரான சண்முலிங்கம் சென்ற 9. 3. 1988 ல் திடீரென மாரடைப்பால் காலமானார்.

21-8-1930 ல் புங்குடுதீவிற் பிறந்த இவர் 1954 ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து 1957 ல் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றார். அங்கு பேராசிரியராக இருந்த எம். எம். தண்டபாணிதேசிகரின் அன்புக்குப் பாத்திரரானார்.

இலங்கையில் பல இடங்களில் இசை ஆசிரியராகக் கடமையாற்றினார். மண்டைதீவில் தமிழிசைச் சங்கத்தை நிறுவி ஆண்டு தோறும் இசை விழாக்களை நடாத்தினார்.

அண்ணாமலைமன்றம், ரசிக ரஞ்சனசபா இளங்கலைஞர் மன்றம் ஆகியவற்றுக்கு உறுதுணையாக இருந்த இவர் வட இலங்கைச் சங்கீத சபையின் செயற்குழு அங்கத்தவராக இருந்து அரிய பணியாற்றினார்.

# இசையரங்கு

## திரு. எஸ். பாலசிங்கம்

நீண்ட இடைவெளிக்குப் பின்பு யாழ் நகரில் இசைக்கச்சேரிகள் நடைபெற ஆரம்பமாகியுள்ளன. 28 – 8 – 87 வெள்ளிமாலை நல்லை ஆதீனத்தில் யாழ் அண்ணமலை இசைத்தமிழ் மன்றத்தினர் மாதாந்திர இசை நிகழ்ச்சியாக நடாத்த ஆரம்பித்துள்ள முதலாவது இசையரங்கில் சங்கீத பூஷணம் திரு. எஸ். பாலசிங்கம் அவர்கள் பாடினுர்.

தனித்தமிழ்க் கீர்த்தனைகளையே கையாண்டு இசைக்கச்சேரியை சோபிக்கச் செய்யமுடியுமா என்பது நீண்டகால சர்ச்சையாகும். ஆனுல் பாலசிங்கம் அவர்கள் முழுவதும் தமிழ்க்கீர்த்தனைகளையும், பாடல்களையும் பாடியே வெகுசிறப்பாகக் கச்சேரியை நிறைவாக்கினுர். இயற்கையாகவே அவரது சாரீரம் ஒலிபெருக்கி அமைப்புக்களுக்கேற்ற கனமானசாரீரம். சுருதி குறைந்த காத்திரமான குரல்வளம். மந்திரஸ்தாயி பிரயோகங்கள் வெகு இதமாகவும், ரம்யமாகவும் இருந்தன. அவரது அனுபவமுதிர்ச்சியும் ஞானமும், நிதானமும் அன்றையகச்சேரியில் நன்கு புலப்பட்டன.

பிலஹரிராகஆலாபனை சிறிது நேரமே என்ருலும் சம்பிரதாய பூர்வமாக இருந்தது காகலிநிஷாதப் பிரயோகமும் செய்து பிலஹரியின் ஸ்வரூபத்தை கச்சிதமாக அமைத்தார். தாரஸ்தாயியில் இன்னும் சிறிது கூடுதலாகச் சஞ்சாரம் செய்திருக்கலாம்.

அமிர்தவர்ஷணியில் அமைந்த எனை நீமறவாதே உருப்படி தண்டபாணி தேசிகம அவர்களது சாகித்யமாகும். கச்சேரியின் வேகம் (டெம்போ) குறையாமலிருக்க மிக உதவியது.

தோடியைப் பிரதான அம்சமாக எடுத்துக்கொண்டு மிக அனுபவித்துப் பாடினுர். ராக ஆலாபனையில் அழுத்தமான பிரயோகங்கள் அடிக்கடி வந்தன. சஞ்சாரங்கள் நன்கு பிடிப்பாக இருந்தன, தமிழில் இருக்கும் சௌக்ககால உருப்படிகளுள் சிறந்த ஒன்று தண்டபாணி தேசிகர் அவர்களின் "திருமகளே" உருப்படி. இந்த உருப்படியின் சங்கதிகள் மிக அற்புதமான தியாகராஜ கிருதிகளுக்கு இணையான சங்கதிகள். நல்ல "வெயிட்" உள்ள உருப்படி திரு. பாலசிங்கம் அவர்கள் இவ்வுருப்படியை அழகாகப்பாடி நிரவல் குறைப்புச் செய்து கச்சேரியை நிறைவுறச் செய்தார். துக்கடா வகைகளும் கேட்பதற்கு இனிமையாக இருந்தன. நீண்ட நாட்களுக்குப் பின்பு ஒரு நல்ல கச்சேரியைக் கேட்டோம் என்ற திருப்தி இருந்தது.

அன்றைய கச்சேரிக்குப் பக்கவாத்தியம் வாசித்தவர்களைக் குறிப்பிடுதல் அவசியம். வளரும் கலைஞர்கள் பா. கண்ணன் வயலின் ப. கிருபாகரன் மிருதங்கம். இருவருமே துடிப்புள்ள இளைஞர்கள். எத்தனையோ வளரும் கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்கு பக்கவாத்தியம் வாசித்துச் சிறப்பித்தவர்கள். அனுபவம் மிக்க பாலசிங்கம் அவர்களுக்கும் மிக அனுசரணையாக நிதானத்துடன் வாசித்தனர் கண்ணனின் ராக ஆலாபனைகள் மிக சுத்தம் தோடியில் ஒரு அருமையான பிடியும் பிடித்து ரசிகர்களை மகிழ்வித்தார். கிருபாகரன் குறைப்பின்போதும், தனியின் போதும் லயசுத்தமாகவாசித்தார். யாழ்ப்பாணத்தின் பக்கவாத்தியம்பருக் குறையை எதிர்காலத்தில் இவ்விரு இளைஞர்களும் தீர்ப்பார்களென நம்புகிருேம்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல மன்றங்கள் சபாக்கள் மாதாந்திரக்கச்சேரிகளை ஆரம்பிப்பர் இரண்டொன்றின் பின்பு அப்பேச்சே இருக்காது. அண்ணமலை மன்றம் நீண்டகாலமாக இயங்கும் மன்றம். மாதாந்திரக்கச்சேரிகளைத் தொடர்ந்து நடாத்துவார்களென நம்புகிருேம்.

— ரசிகப்பிரியா

## சங்கீத சூடாமணி

சென்னை ஸ்ரீ கிருஷ்ண கானசபாவினால் வருடாவருடம் கோகுலாஷ்டமி சங்கீத உத்சவத்தின் போது வழங்கப்படும் சங்கீத சூடாமணி என்னும் விருது இவ்வருடம் வைணிக வித்வான் தஞ்சாவூர் கே.பி. சிவானந்தம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஒரு வீணை வித்வானுக்கு இப்பட்டம் கிடைத்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இவரது முன்னோர்கள் ஏழு தலைமுறையாகச் சிறந்த சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவருடைய தந்தையாராகிய சங்கீத கலாநிதி தஞ்சாவூர் கே. பொன்னையா பிள்ளை அண்ணாமலைப்பல்கலைக்கழக இசைத்துறையின் ஆரம்பகாலந்தொட்டு விரிவுரையாளராகவும் பின் பேராசிரியராகவும் விளங்கினார். சிவானந்தம் அவர்களும் அங்கு இசைபயின்று சங்கீத பூஷணம் பட்டம் பெற்றுப் பின் வீணை விரிவுரையாளராகச் சில காலம் கடமையாற்றினர். அப்போது அங்கு தமிழ்ப்பேராசிரியராகவிருந்த விபுலானந்த அடிகளுடன் இணைந்து யாழ் இசை ஆய்வினை நடாத்தினர். அடிகள் தனது யாழ் நூலை எழுதும் போது இவர் அவருக்கு உறுதுணையாக இருந்தார்.

1946ம் ஆண்டு சென்னை மத்திய மியூசிக் கல்லூரி ஆரம்பித்த காலத்திருந்து அங்கு விரிவுரையாளராகக் கடமையாற்றிப் பின் பேராசிரியராக இளைப்பாறினர். மட்டக்களப்பு இசைக்கல்லூரியிலும் சில காலம் அதிபராக இருந்தார். 1979ல் தமிழ் நாட்டு அரசினால் ஆஸ்தான வித்வானாக நியமிக்கப்பட்டார். 1980ல் சங்கீத நாடக அகடமியின் விருது பெற்றார். சென்னை மியூசிக் அகடமியினதும் தமிழ் இசை மன்றத்தினதும் விற்பன்னர் குழுவில் அங்கத்தவராக இருந்தார். பல வெளிநாடுகளிற் கச்சேரிகள் செய்திருக்கிறார். தனது மனைவி சாரதாவுடன் சேர்ந்தே வீணை வாசிப்பதுண்டு. இவரது வாசிப்பு மிகவும் உணர்ச்சி ததும்பும் வகையில் சம்பிரதாயத்தை ஒட்டியே தஞ்சாவூர் பாணி அல்லது காயகி பாணி (அதாவது வாய்ப்பாட்டுப் பாணி) யில் அமைந்திருக்கும்.

இவரது பிள்ளைகள் ஒருவரும் இசையில் முழுமையாக ஈடுபடவில்லை. எனவே ஏழு தலைமுறையான இசைப்பரம்பரை இவருடன் முடிவுற்ற தெனலாம்.

---

## அகில இந்திய கர்நாடக இசையாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

சென்னையில் சங்கீத வித்வான்கள் சிலர் சேர்ந்து மேற்படி சங்கத்தை (All India Carnatic Musicians' Association) அண்மையில் அங்குரார்ப்பணம் செய்தனர். அச்சங்கத்தில் 20 பேரே அங்கத்தவராக உள்ளனர். அதன் அங்கத்தவர்கள் ஒற்றுமையாக இருப்பதற்கும் சங்கம் நன்றாகச் செயல் படுவதற்கும் அங்கத்தவர்கள் தொகை குறைவாக இருத்தலே நல்லதென்று அதன்செயலாளர் லால்குடி ஜி. ஜெயராமன் கூறினர். அதன் அங்கத்தவர்கள் வருமாறு: தலைவர்: செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர், உபதலைவர்கள் மைசூர் வி. துரைஸ்வாமி ஐயங்கார், ஈமனி சங்கரசாஸ்திரி, எம். எல். வசந்தகுமாரி, மகாராஜபுரம் சந்தானம், கே. ஜே. ஜேசுதாஸ், பொதுச் செயலாளர்: லால்குடி ஜி. ஜெயராமன். இணைச்செயலாளர்: சிட்டிபாபு, தனதிகாரி: வேலூர் ராமபத்திரன், செயற்குழு உறுப்பினர்கள்: நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், நேதுனூரிகிருஷ்ணமூர்த்தி, என். ரமணி, டி. கே. கோவிந்தராவ், எம். சந்திரசேகரன், டி. ஆர். சுப்பிரமணியம், டி. வி, சங்கரநாராயணன். டி. ருக்மிணி, குருவாயூர் துரை, டி. எச், விநாயக்ராம், புதுக்கோட்டை மகாதேவன். உபதலைவர்களுள் ஒருவரான மகாராஜபுரம் சந்தானம் பேசுகையில் சங்கத்தின் பெயர் ஐக்யமாக (AICMA) இருப்பதால் அங்கத்தவர்கள் ஒற்றுமையாக இருப்பார்களெனத் தான் நம்புவதாகக் கூறினர். ஐக்கியம் என்றிருந்தால் இந் நம்பிக்கை ஒருவேளை சரிவரலாம். ஐக்கியமா என்றிருப்பதால் அது கேள்விக்குறியாக இருக்கிறதென்று சென்னையில் பேசிக் கொண்டனர்.

உறுப்பினர் தொகையைக் கட்டுப்படுத்துவதைக் ஆட்சேபித்து உமையாள்புரம் கே. சிவராமன், டி. எம். தியாகராஜன் ஆகியோருடன் பல வித்துவான்கள் கூட்டத்திலிருந்து வெளியேறினர். கிளாசிக்கல் மியூசிஷன்ஸ் போரம் (Classical Musicians' Forum) என்றொரு புதிய சங்கத்தை இவர்கள் உருவாக்கினர். அதன்செயற்குழு உறுப்பினர் வருமாறு:

தலைவர்:- டி. கே. மூர்த்தி உபதலைவர்கள்: டி. எம். தியாகராஜன், உமையாள்புரம் கே. சிவராமன், மதுரை ஜி. எஸ். மணி, செயலாளர்கள்: வி. வி. சுப்பிரமணியம், தஞ்சாவூர் உபேந்திரன், இணைச்செயலாளர்: சி. சரோஜா, பொருளாளர்: எம். எஸ். கோபாலகிருஷ்ணன், உறுப்பினர்: பி. ராஜம் ஐயர், கே. வி. ராமச்சந்திரன், சிக்கில் குஞ்சுமணி, மணிகிருஷ்ணசாமி, சி. லலிதா, சிக்கில் பாஸ்கரன், ஸ்ரீ முஷ்ணம் ராஜாராம், ஏ. கன்யாகுமாரி, ரி. லோகநாதசர்மா.

## இந்திய விழா

சோவியத் யூனியனில் நடைபெறும் ஒரு வருட இந்திய விழாவில் கலந்து கொள்வதற்காகத் தமிழ் நாட்டிலிருந்து செல்லும் கலைஞர்களும் அவர்களின் கோஷ்டிகளின் எண்ணிக்கைகளும் பின்வருமாறு:-

இசை:- எம். எஸ். சுப்புலெட்சுமி-10, மைசூர் துரைஸ்வாமி ஐயங்கார்—10, காரைக்குடி மணி(ஸ்ருதி லயக்குழு)—10, ரி.என். கிருஷ்ணன்— 8, சின்ன மௌலானா—6, கே. வி. நாராயணஸ்வாமி — 5, மணி கிருஷ்ணசாமி—5. ரி. என். சேஷகோபாலன்—5. லால்குடி ஜெயராமன்—5, சிட்டிபாபு—5, அருணா சாயிராம்—3, பி. வெங்கட்ராமன் (வீணை)—3, ஆர். தியாகராஜன் (புல்லாங்குழல்) — 3.
நடனம்: கலாக்ஷேத்ரா — 41, வேம்பட்டி சின்னசத்யம் — 22, வி.பி. தனஞ்ஜெயன் — 21 யாமினி கிருஷ்ணமூர்த்தி — 10, பத்மா சுப்பிரமணியம் — 8, ஸ்வப்ன சுந்தரி — 8 சுதாராணி ரகுபதி — 6, சித்ரா விஸ்வேஸ்வரன் — 6, ஸ்வர்ணமுகி — 6, லீலா சாம்சன் — 6, பாரதி சிவாஜி — 6, ஷோபா நாயுடு — 6, ஷோபா நடராஜன் — 5, ஜெயலெட்சுமி ஈஸ்வர் — 5,

## ஸிம்ஹ நந்தனம்

கலியுக நந்தி என்றழைக்கப்படும் மிருதங்க மேதை பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் அவர்களின் 75 வது ஜயந்தி விழா சென்ற ஆனி மாதம் சென்னையில் விமரிசையாக இரண்டு நாட்கள் கொண்டாடப்பட்டது. முதல் நாள் டி. என். கிருஷ்ணன், எம். எல். வசந்தகுமாரி உட்படப் பலர் அவரைப் பாராட்டிப் பேசினர். இறுதியில் டி. என். கிருஷ்ணனின் வயலின் சோலோ இடம் பெற்றது. இரண்டாம் நாள் ஒரு விசேஷ தாளவாத்யக் கச்சேரி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. உமையாள் புரம் கே. சிவராமன் மிருதங்கமும் இ.எம். சுப்பிரமணியம் கடமும் வி. நாகராஜன் கஞ்சிராவும் வாசித்தனர். ஸ்ரீ வாஞ்சியம் கே. ராமச்சந்திர ஐயர் சங்கராபரணத்தில் சிம்ஹ நந்தன தாளத்தில் அமைந்த ஒரு பல்லவி பாடினர்.

108 தாளவகைகளில் ஒன்றான சிம்ஹ நந்தனம் 128 அக்ஷரங்களைக் கொண்டது. முடிகொண்டான் வெங்கட்ராமையரின் சிஷ்யரான ராமச்சந்திர ஐயர் முதலாம் காலத்தில் இடது கையாலும் இரண்டாம் மூன்றாங் காலங்களில் வலதுகையாலும் தாளம் போட்டார். பி.எஸ். நாராயணஸ்வாமி, மதுரை ஜி. எஸ். மணி, கோயம்புத்தூர் தக்ஷிணா மூர்த்தி, மன்னார்குடி ஈஸ்வரன் ஆகியோர் முதல் வரிசையிலிருந்து தாளம் போட்டு நிகழ்ச்சி சிறப்பாக அமைய உதவினர்.

## நாயகியும் தர்பாரும்

ஒ சமயம் திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை வீணை தனம்மாளைக் காணப் போனார். அப்போது பிள்ளையின் இன்னொரு ரசிகரும் அங்கு வந்திருந்தார். அவர் பிள்ளையைப்பார்த்து, "என்ன ஸார், உங்களுடைய தர்பாரிலே நாயகியைக் கலந்து வாசிச்சிட்டிங்களாமே?" என்று கேட்டார், உடனே அவர் "ஆமாம், ஒரு நாயகி இல்லாத தர்பார் எப்படீங்க சோபிக்கும்?" என்று பதில் அளித்தார். எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

# சரணம்

இந்தியாவிலிருந்து நமது நாட்டுக்குவந்த பாணன் ஒருவன் இலங்கை அரசன் முன் தனது யாழை மிகவும் இனிமையாக வாசித்து யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்ருன் என்பது ஒரு பூர்வீகக்கதை. இது எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியாது. ஆனல் இங்கிருந்த செல்வந்தர்களும் மன்றங்களும் சபாக்களும் பற்பல ஆண்டுகளாகத் தென்னிந்தியாவிலிருந்து பிரபல இசை நடனக் கலைஞர்கள் பலரை இங்கு வரவழைத்துப் பல கலை நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளார்கள் என்பது எல்லோருமறிந்த உண்மை. இந்த மன்றங்கள் பல வருடங்களாக இசை வகுப்புக்களையும் இசை விழாக்களையும் வெகு சிறப்பாக நடாத்தி வந்தன. சங்கீத அறிவும் இங்கு மிகவும் பரவலாகவளர்ந்து வந்தது. ஆனல் கடந்த சில ஆண்டுகளாக இங்குள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக ஒரு நிகழ்ச்சியுமே இடம் பெறவில்லை. சுருங்கக்கூறின் யாழ்ப்பாணம் ஒரு கலாச்சார வனந்தரமாகிவிட்டது. எனினும் இன்று எம்மைச் சூழ்ந்துள்ள இருள் வெகு விரைவில் அகன்று ஓர் ஒளிமயமான எதிர்காலம் விடியத்தான் போகிறது. அப்படி விடியும் போது எமது கலை, கலாச்சாரம் முதலியவற்றில் முன்னெருபோதும் இல்லாத ஒரு புதிய உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் ஒருமறுமலர்ச்சி மிளிரப் போகின்றது. அந்த மறுமலர்ச்சியின் ஓர் அம்சமாகவே இம்மலரை எமது வாசகர்களுக்கு அர்ப்பணிக்கிருேம்.

காலத்துக்குக் காலம் எத்தனையோ மகாவித்துவான்கள் தமிழ் நாட்டில் தோன்றி இசைக்கலை வளர்ச்சிக்காகப் பல்வேறு வழிகளில் பெரும்பணி புரிந்துள்ளனர். இவர்களுள் சாகித்திய கர்த்தாக்கள் சிலரைப்பற்றிய சரித்திரமும் குறிப்புக்களும் இசைசம்பந்தமான நூல்களிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஏனையோரைப்பற்றி இசையுலகிலுள்ள இளம் சந்ததியினருக்கு ஒன்றுமே தெரியாமலிருக்கலாம். இவர்கள் இக்கலைக்குச் செய்துள்ள மகத்தான சேவையைப்பற்றியும் அவர்களின் வாழ்க்கைபற்றியும் இளம்வித்துவான்களுக்கும் இசைமாணவர்களுக்கும் அறியவைத்தல் எமது பணிகளில் ஒன்ருகும். இளம் உள்ளங்களை மிகவும் கவர்ந்த ஜி. என். பியைப்பற்றி முதலிதழில் எழுதுவது சாலப்பொருந்தும்.

இதே போல நமது நாட்டிலும் இத்துறையில் அரும்பெரும் சேவை செய்த பெரியோர்களையும் நாம் நினைவு கூருதல் வேண்டும். இந்த வரிசையில் அண்மையிற் காலஞ்சென்ற திரு. சண்முகரத்தினம் அவர்களைப் பற்றி யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வரைந்த கட்டுரையும் இவ் இதழில் இடம் பெறுகிறது. மேலும் நம் நாட்டுக் கலைஞர்கள் சிலர் பிற நாடுகளில் தத்தம் கலைகளிற் பிரபல்யம் அடைந்து நம் நாட்டுக்குப் பெருமையைத்தேடித் தருகிருர்கள். இவர்களில் ஒருவராகிய பூஷணி கல்யாணராமன் அவர்களைப் பற்றிய உரைகளும் இம் மலரில் உள்ளன.

இவற்றைவிட தியாகராஜகிருதி விளக்கம், ராகலக்ஷணம்முதலிய சில அம்சங்களும் இடம்பெறுகின்றன. கலைப்புதிரில் சாதாரணமாகப் பரீட்சைகளிற் காணும் வினக்கள் போலல்லாது வேறுபட்ட பொதுவான விஷயங்கள் கேட்கப்பட்டுள்ளன.

நம் நாட்டிற் காலத்துக்குக்காலம் இது போன்ற பல சஞ்சிகைகள் தோன்றி மறைந்து விட்டன. ஒருசஞ்சிகையின் வளர்ச்சி அதன் வாசகர்களிலேயே தங்கியுள்ளது. எனவே நம் வாசகர்கள் எமக்குப் பல வழிகளிலும்ஊக்கமளித்தால் நாம் வளர்ச்சியடைய முடியுமென்பது திண்ணம்.

நிர்வாக ஆசிரியர்

---

*இம்மலர் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் 411/1 ம் இலக்கத்திலுள்ள செட்டியார் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 167ம் இலக்கத்தில் வதியும் டபிள்யு. எஸ். செந்தில்நாதன் என்பவரால் வெளியிடப்பட்டது.*

வாழிய பல்லவி
வாழி நம்கலைகள்
வாழிய வாழியவே!

# பரணி பார்மசி

456, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

*With the best Compliments of*

# Vaigee Medicals

Dealers in & Distributors of
Pharmaceuticals

**520, (Old No. 280/1), Hospital Road,**
(opp. The Administration Block, Civil Hospital)
**JAFFNA**